Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAI TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 6 பக்கம் | புதன்கிழமை, டிசம்பர் 27 2023 | இதழ் 164

## சமூக நீதியின் அடிப்படையில் சமத்துவ சமுதாயமாக தமிழ்நாட்டை மாற்றுவோம் முதல்வர் ஸ்டாலின் உறுதி ரூ.184 கோடி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

*சென்னை, 27 டிசம்பர் 2023:* சமூக நீதியின் அடிப்படையில் சமத்துவ சமுதாயமாக தமிழ்நாட்டை உருமாற்றும் வகையில் நமது பயணத்தை தொய்வின்றி தொடர்வோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் கல்வி, சுயதொழில், உட்கட்டமைப்பு மேம்பாடு பன்முகச் சிறப்பு விழா நடைபெற்றது.

இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் ரூ.184 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் பயனாளிகளுக்கு வழங்கினார். ரூ.171 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விழாவில் பேசியதாவது:

எல்லார்க்கும் எல்லாம் என்பதை நிர்வாக நெறியாக கொண்டு திட்டங்களை தீட்டி வருகிறோம். அந்த அடிப்படையில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள், சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி மேம்படுத்த தனிக்கவனம் செலுத்தி பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகிறோம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தொண்டாற்றி வருகிற நபர்களுக்கு ஆண்டுதோறும் 'டாக்டர் அம்பேத்கர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இப்போது, இந்த விருதுடன் பரிசுத் தொகையாக 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.



- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் கல்வி பயில கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது.
- கடந்த மூன்று ஆண்டுகளில் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 விடுதிகள் உருவாக்கப்பட்டிருக்கிறது.
- அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- இதேபோல, பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் பழங்குடியினர் குடியிருப்புகளில் 475 கோடி ரூபாய் செலவில் 25 ஆயிரத்து 262 அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- மக்களிடையே தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24 முதல் 30-ம் நாள் வரை "மனிதநேய வார விழா" நடத்திக் கொண்டு வருகிறோம்.
- கடந்த ஆண்டு 21 புத்தொழில் நிறுவனங்கள் 28 கோடியே 10 லட்சம் ரூபாய் பயன்பெற்ற நிலையில் இந்தத் திட்டத்தின் சிறப்பான வெற்றியை கருத்தில் கொண்டு 2023 -24 ம் நிதியாண்டுக்கு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தொழில் முன்னோடிகள் திட்டம்
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர் உற்பத்தி, வணிகம், மற்றும் சேவை சார்ந்த புதிய தொழில் தொடங்க, திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 35 விழுக்காடு முதலீட்டு மானியத்துடன் ஒன்றறை கோடி ரூபாய் வரை கடன் பெற உதவுகிற 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' நம்முடைய அரசால் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.
- இந்தத் திட்டத்துக்காக நடப்பு நிதியாண்டில் 100 கோடி ரூபாய் நிதியை தமிழ்நாடு அரசு ஒதுக்கியிருக்கிறது.

சமூக நிலைகளில் உயர்த்துகின்ற அனைத்து முயற்சிகளையும் நம்முடைய அரசு கவனத்துடன் மேற்கொண்டு வருகிறது. இதன் தன்னம்பிக்கை, - சுயமரியாதை, - அதிகாரத்தில் பங்கு போன்ற நிலைகளில் ஆதிதிராவிட பட்டியலின மக்களை உயர்த்துகின்ற பணிகளை அரசு செய்துகொண்டு வருகிறது.

இப்படி தொடர்ச்சியான பணிகள் மூலமாகதான் சுயமரியாதைச் சமதர்ம சமுதாயத்தை நாம் உருவாக்கியாகவேண்டும். நிதி ஒதுக்கீடுகளால், தொலைநோக்குப் பார்வையால், கண்காணிப்பால், மற்ற வளர்ச்சிகளை நாம் எட்டிவிடலாம். ஆனால், சமூக வளர்ச்சியும், சிந்தனை வளர்ச்சியும் மக்கள் மனங்களில் உருவாகவேண்டும். மக்களுடைய மனதளவில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

இது அவ்வளவு சீக்கிரமாக ஏற்படாது என்பதும் உண்மைதான். அதே நேரத்தில் சமூக வளர்ச்சி, - சிந்தனை வளர்ச்சியை உருவாக்குகின்ற நம்முடைய விழிப்புணர்வு பயணம் என்பது, தொய்வில்லாமல் தொடரவேண்டும். அந்தப் பணிகளையும் நம்முடைய திராவிட மாடல் அரசு செய்துகொண்டு வருகிறது.

அம்பேத்கரின் கனவான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகள் நிறைந்த, சமூக நீதியின் அடிப்படையிலான ஒரு சமத்துவ சமுதாயமாக தமிழ்நாட்டை உருமாற்றும் வகையில் நம்முடைய விழிப்புணர்வுப் பயணத்தை தொய்வின்றித் தொடருவோம்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

இவ்விழாவில் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அன்பரசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர் பாபு, சி.வி.கணேசன், மேயர் பிரியா, காங்கிரஸ் சட்டமன்ற குழுவின் தலைவர் செல்வப் பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ்.எஸ்.பாலாஜி, பன்னீர்செல்வம், ஸ்டாலின் குமார், சிவகாம சுந்தரி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் நலத்துறை செயலாளர் லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மதிவாணன், அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## டாடா மோட்டார்ஸின் புதிய சஃபாரி மற்றும் ஹாரியர் எஸ் யூ விகள் முதன்முறை பாரத்என் சி ஏ பி 5-நட்சத்திர மதிப்பீட்டைப் பெற்றுள்ளன




*சென்னை, 27 டிசம்பர் 2023:* இந்தியச் சாலைகளில் பாதுகாப்பான வாகனங்களை அறிமுகப்படுத்தும் பாரம்பரியத்தைத் தொடர்ந்து, இந்தியாவின் முன்னணி ஆட்டோமொபைல் பிராண்டான டாடா மோட்டார்ஸ், இன்று இந்திய வாகனத் துறைக்கு மற்றொரு முன்மாதிரியாக அமைந்துள்ளது. அதன் பிரபலமான, முதன்மையான எஸ் யூ வி, புதிய ஷிணீயீணீக்ஷீ வீ மற்றும் ட்ரெண்ட்செட்டிங், பிரிமியம் எஸ் யூ வி ஹாரியர், பாரத் புதிய கார் மதிப்பீட்டு திட்டத்தின் (பாரத்என் சி ஏ பி) கீழ், 5-நட்சத்திர மதிப்பீட்டின் (வயது வந்தோர் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு) முதல் பெறுநர்களாக மாறியுள்ளது. இது, இந்தியாவின் சொந்த மற்றும் சுதந்திரமான பாதுகாப்பு செயல்திறன் மதிப்பீட்டு நெறிமுறை.

இந்த தனித்துவமான சாதனையை அறிவித்த மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள், "பாரத்என் சி ஏ பி என்பது இந்தியாவின் சுதந்திரமான, வாகனப் பாதுகாப்புக்கான ஆத்மாநிர்பர் குரல். இது சிறந்த-இன்-கிளாஸ் உலகளாவிய தரநிலைகளுக்கு தரப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் பாரத்என் சி ஏ பி வாகன தரவரிசை அமைப்பு கட்டாய விதிமுறைகளுக்கு அப்பால்



சாலை பாதுகாப்பு மற்றும் வாகன பாதுகாப்பு தரங்களை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. டாடா மோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து அதிக 5-நட்சத்திர மதிப்பீட்டைக் கொண்ட முதல் வாகனங்கள் இன்று சான்றிதழ் பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அதிகபட்ச மதிப்பீடுகளுடன் இந்த விரும்பத்தக்க சான்றிதழை வழங்கியதற்காக நான் அவர்களை வாழ்த்துகிறேன் மற்றும் இந்திய சாலைகளில் பாதுகாப்பான வாகனங்களை அறிமுகப்படுத்துவதற்கான அவர்களின் பாரம்பரியத்தை தொடர்ந்து வளப்படுத்த வாழ்த்துகிறேன்" என்று கூறினார்

இந்த பிரபலமான சான்றிதழைப் பெற்ற பிறகு பேசிய, டாடா மோட்டார்ஸ் பயணிகள் வாகனங்கள் லிமிடெட் மற்றும் டாடா பாசஞ்சர் எலக்ட்ரிக் மொபிலிட்டி மேலாண்மை இயக்குனர் திரு. ஷைலேஷ் சந்திரா அவர்கள், "பல்வேறு வாகன அம்சங்கள், தகவலறிந்த வாடிக்கையாளர்கள் உகந்த முடிவுகளை எடுப்பது, நாட்டில் பாதுகாப்பான வாகனங்களுக்கான விருப்பத்தை மேலும் வளர்க்கும். இந்த நோக்கத்தில் அரசாங்கம், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் வாகனத் துறையின் கூட்டு முயற்சிகளை நாங்கள் ஏற்கிறோம், பாராட்டுகிறோம். டாடா மோட்டார்ஸில், பாதுகாப்பு எங்கள் டி என் ஏவின் மையத்தில் உள்ளது மற்றும் எங்களின் இரண்டு வாகனங்களுக்கு முன்மாதிரியான 5-நட்சத்திர மதிப்பீட்டுடன் இந்த முதல் பாரத்என் சி ஏ பி சான்றிதழை வெல்வதில் பெருமையடைகிறோம். வாகன பாதுகாப்பை முழுமையாக மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என்று கூறினார்.

லேண்ட் ரோவர் இன் புகழ்பெற்ற டி 8 பிளாட்ஃபார்மில் இருந்து பெறப்பட்ட ஒமேகாஆர்சி கட்டமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள, சக்திவாய்ந்த மற்றும் ஸ்டைலான சஃபாரி மற்றும் ஹேரியர் எஸ் யூ விகள் உயர் 5-நட்சத்திர நிஎன் சி ஏ பி மதிப்பீட்டில் வருகின்றன, மேலும் அவை உண்மையிலேயே இந்திய சாலைகளில் பாதுகாப்பான வாகனங்களாகத் திகழ்கின்றன.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# "என் இனத்திற்கு என்று வரலாறே கிடையாது" ; 'சல்லியர்கள்' பட நிகழ்வில் சீமான் ஆதங்கம்

# "வரலாறு எப்போதும் பொய் பேசாது.. பேசக்கூடாது.." ; 'சல்லியர்கள்' பட நிகழ்வில் சீமானின் அறச்சீற்றம்

# "தேன்கூட்டை தொடுவது போன்ற கவனத்துடன் 'சல்லியர்கள்' படத்தை எடுத்துள்ளனர்" ; சீமான் பாராட்டு






சென்னை, 27 டிசம்பர் 2023: ஐ சி டபிள்யூ நிறுவனம் சார்பில் கலைமாமணி சேது கருணாஸ் மற்றும் கரிகாலன் இணைந்து தயாரித்துள்ள படம் 'சல்லியர்கள்'. மேதகு படத்தை இயக்கிய இயக்குநர் கிட்டுவின் டைரக்சனில் உருவாகியுள்ள இரண்டாவது படம் இது. சத்யா தேவி என்பவர் டாக்டர் நந்தினியாக முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க, அவரது தந்தையாக கருணாஸும், ஆர்மி வில்லனாக களவாணி புகழ் திருமுருகனும் மற்றும் டாக்டர் செம்பியனாக மகேந்திரனும் நடித்துள்ளனர். இன்னும் பல புதுமுகங்களும் இந்தப்படத்தில் நடித்துள்ளனர்.

கவிப்பேரரசு வைரமுத்து பாடல்கள் எழுதியுள்ள இந்த படத்திற்கு கருணாஸ் மகன் நடிகர் கென் மற்றும் அவரது நண்பர் ஈஸ்வர் இருவரும் இணைந்து இசையமைத்துள்ளனர். இந்தப்படத்தின் சிறப்பு நிகழ்ச்சி நேற்று மாலை சென்னை சாலிகிராமம் பிரசாத் லேபில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தயாரிப்பாளர்கள் கலைப்புலி எஸ்.தாணு, பி.எல்.தேனப்பன், சிவா கிலாரி, இயக்குநர்கள் வ.கவுதமன், பொன்ராம் மற்றும் நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தயாரிப்பாளர் கலைப்புலி எஸ்.தாணு பேசும்போது, "சல்லியர்கள் சாமானியர்கள் அல்ல.. சகாப்தம், சரித்திரம் படைக்கப் போகிறார்கள்.." என்று கூறினார்

தயாரிப்பாளர் சிவா கிலாரி பேசும்போது, "எனக்கு தமிழ் கொஞ்சம் கொஞ்சம் தான் தெரிந்தாலும் இங்கே அண்ணன் சீமான் அமர்ந்திருப்பதால் கொஞ்சம் பயமாக இருக்கிறது. அதனால் தமிழில் தான் பேச போகிறேன். என் முதல் படம் 'விசித்திரன்'. இரண்டாவது படம் 'போகும் இடம் தூரம் இல்லை'. அதில் கருணாஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். படம் தயாரிப்பது எளிதான காரியம் அல்ல. படம் பற்றி கொஞ்சம் பாசிட்டிவாக எழுதினால் திரையரங்குகளுக்கு கூட்டம் வரும். திரையரங்குகளை நம்பித்தான் நாங்கள் இருக்கிறோம்" என்று கூறினார்.

இயக்குநர் பொன்ராம் பேசும்போது, "இந்த விழாவிற்கு என்னை அழைப்பதற்காகவே படத்தை போட்டு காட்டினார்கள். அற்புதமான படைப்பு இந்த சல்லியர்கள். இந்த படத்தில் நந்தினி கதாபாத்திரத்தில் நடித்துள்ள நடிகைக்கு எத்தனை நாள் பயிற்சி கொடுத்தார்கள் என தெரியவில்லை, அந்த அளவிற்கு மிகச்சிறப்பாக நடித்திருக்கிறார். ஒரு மண்ணை சார்ந்த உணர்வுபூர்வமான படம் இது. படம் என்று சொல்வதை விட ஒரு நாவலை படிப்பது போன்ற உணர்வை கொடுத்தது. போர் காட்சிகளும் முறையான பயிற்சி கொடுத்து படமாக்கப்பட்டது போல் தெரிகிறது" என்று கூறினார்.

தயாரிப்பாளர் பி.எல் தேனப்பன் பேசும்போது, :இயக்குநர் கிட்டு தனது முதல் படமான மேதகு படத்தையும் சிறப்பாக எடுத்திருந்தார். ஓடிடியில் மிகப்பெரிய அளவில் ஹிட்டான படம் அது. இந்த படத்தையும் நான் பார்த்தேன். நல்ல தரமான படைப்பாக வந்திருக்கிறது. இதை ஒரு இலங்கை படம் என பாராமல் கன்னத்தில் முத்தமிட்டால் படம் போல ஒரு காதல் படமாக பாருங்கள். ஒரு இசையமைப்பாளராக கருணாஸின் மகன் கென் இன்னும் பக்குவப்பட்டவராக இருக்கிறார். அருமையாக இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார்" என்று கூறினார்.

இயக்குநர் வ.கவுதமன் பேசும்போது, "சல்லியர்கள் திரைப்படமாவதற்கு முன்பே கிட்டு என்னிடம் இந்த கதையை கூறினார். ஒருவகையில் என்னுடைய மகன் தமிழ் கவுதமன் இந்த படத்தின் நாயகனாக நடிப்பதாக இருந்தது. ஆனால் இன்னொரு படத்தில் நடிப்பதற்கான வேறு தோற்றத்தில் இருந்ததால் உடனடியாக இதற்கு மாற முடியவில்லை. கதையாக கேட்கும் போது எனக்குள் ஒரு சிலிர்ப்பையும் படமாக பார்த்தபோது, குறிப்பாக இரண்டாம் பகுதியை பார்த்து முடித்தபோது எனக்கும் இயக்குநர் பொன்ராமுக்கும் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இந்த படத்தில் கதாநாயகியாக நடித்துள்ள பெண் ஒரு பேயை போல நடித்துள்ளளார். திரையில் இன்று இருக்கும் எந்த ஒரு பெரிய நடிகையும் அந்த நடிப்பை வழங்கியிருக்க முடியுமா என தெரியவில்லை. நடிப்பால் நம் மனதை உறைய வைத்து விட்டார்.

பகைவனுக்கும் அருள்வாய் நன்நெஞ்சே என பாரதியார் சொன்ன அந்த வார்த்தைகள் தமிழர்களுக்கு மட்டுமே பொருத்தம். அந்த கருத்தை தான் இந்த படம் சொல்லுகிறது. போராட்டத்தில் காயம்பட்டவர்களை காப்பாற்றும் மருத்துவர்களை கூட அழிக்க வேண்டும் என எதிரி நினைக்கிறான்.. அதுதான் இந்த படத்தின் கருப்பொருள்.. காப்பாற்றுபவன் கடவுளுக்கு சமமானவன். அந்த கடவுளையே அழிக்க நினைக்கிறான் எதிரியான சிங்களவன் ஆனால் அவனையும் காப்பாற்ற நினைக்கும் இனம் தான் நம் தமிழினம். மேதகு பிரபாகரனால் வளர்க்கப்பட்டவர்களுக்கு மட்டுமே அது சாத்தியம். இந்த படைப்பை தமிழினம் உச்சி முகர்ந்து கொண்டாட வேண்டும் பேசாப்பொருளை பேசுவது தான் படைப்புக்கு பேரழகு. அதை இந்த படம் பேசுகிறது. 15 வருடங்களுக்கு முன்பே 'சந்தனக்காடு' தொடர் மூலமாக வீரப்பன் வாழ்க்கையை எந்த சமரசமும் இன்றி அரசுகளின் அச்சுறுத்தலை எல்லாம் எதிர்கொண்டு நிஜத்தை மட்டுமே துணிச்சலாக கூறியிருந்தேன். அது இன்றும் பேசப்படுகிறது. அதே சமயம் இன்று வீரப்பனை பற்றி பல பொய்யும் புனைக் கதைகளும் சொல்லப்பட்டு வருகின்றன. ஆனால் இன்றும் கூட அப்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு கொடுக்க இங்கு யாருக்கும் தோன்றவில்லை. வீரம் செறிந்த ஈழப் போராட்டத்தை ஒரு படமாக எடுப்பதற்கு முன்னோட்டமாகவே சந்தனக்காடு தொடரை எடுத்தேன். சந்தனக்காடு போலவே இந்த உலகத்தை முழுக்க அதிர வைக்க இன்னும் படைப்புகள் ஒரு நாள் வரும். அதை செய்யாமல் நான் ஓயமாட்டேன்.

இன்றைய சூழலில் ஒரு குறிப்பிட்ட சதவீத தமிழர்கள் முன்னிலையில் என்னை ஒரு குற்றவாளியாக நிறுத்தும் ஒரு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது எனக்கு அதைப் பற்றி கவலை இல்லை. சண்டை போட்டவன், கொன்று குவித்த சிங்களவன் இன்றும் ஒற்றுமையாக இருக்கிறான்.. ஆனால் சிதறி ஓடிய நம் கூட்டம் இன்னும் தங்களுக்குள் பகை வளர்த்து பிரிந்தே கிடக்கிறது. பொய்யை உண்மையாக்குகிற ஒரு சூழலை இனி தமிழினம் அனுமதிக்க கூடாது" என்று கூறினார்.

நடிகர் திருமுருகன் பேசும்போது, "நிறைய படங்களில் நடித்திருந்தாலும் இந்த படம் எனது மனதுக்கு நிறைவான படம். தம்பி கிட்டு ஆரம்பத்தில் எடுத்த குறும்படத்தில் நான் தான் நடித்தேன். ஆனால் மேதகு படத்தில் நடிக்க முடியவில்லை. கிட்டு தமிழ் சமூகத்திற்கு ஒரு முக்கியமான படைப்பாளி. மேதகு படத்தை விட சல்லியர்கள் மிகப்பெரிய வெற்றி பெறும். சல்லியர்கள் யுத்த களத்தில் நடக்கின்ற ஒரு படம். ஆனால் பார்வையாளர்களை பொருத்தவரை அது ஒரு ஹீரோ வில்லன் படம் தான். முழு பொழுதுபோக்கு அம்சம் கொண்ட படம். ஒரு அரக்க கூட்டத்திற்கும் அறத்துடன் நிற்கும் கூட்டத்திற்கும் இடையில் நடக்கிற கதை இது. வெகு ஜன ரசிகராக நீங்கள் இருந்தால் 100% இந்த படம் உங்களுக்கு பிடிக்கும். தமிழ் உணர்வாளர்களாக இருந்தால் ஆயிரம் முறை உங்களுக்கு பிடிக்கும். இந்த படைப்பை மிகப்பெரிய அளவில் கொண்டு வந்ததற்கு காரணம் கருணாஸ் அண்ணன் தான். இந்த படம் அவருக்கு நிச்சயம் பெரிய வெற்றியை கொடுக்கும். யுத்த களத்தை மையப்படுத்திய வெளிநாட்டு படங்களை பார்க்கும் நம்மவர்களுக்கு ஏன் நம்மூரில் இப்படி ஒரு படம் வருவதில்லை என்கிற ஏக்கம் இருக்கும். அப்படி நம் ஊரில் போர்க்களத்தை மையப்படுத்தி வந்த படங்களில் இந்தப் படம் தான் ஆகச்சிறந்த படமாக இருக்கும்" என்று கூறினார்.

நார்வே நாட்டில் நார்வே திரைப்பட திருவிழாவை பல வருடங்களாக நடத்தி வரும் வசீகரன் பேசும்போது, "அகிம்சை ஏந்தி போராடிய எங்கள் இனம் ஆயுதம் ஏந்தி போராடிய வேண்டிய சூழல் ஏற்பட்டது. இன்று அறிவாயுதம் ஏந்தி போராட வேண்டிய நிலையில் இருக்கிறோம். கடந்த 14 ஆண்டுகளில் எம் இனம் விழுந்து கிடந்ததாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சினிமா என்னும் ஊடகத்தின் ஊடாக சரியான திரைப்படங்கள் வரவேண்டும் என்ற 10 நோக்கங்களில் ஒரு நோக்கத்திற்காக நார்வே திரைப்பட விழா 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இருந்து தமிழர்களின் கலை, பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல் மற்றும் வலிகளை பேசுகின்ற திரைப்படங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தமிழர்களின் அடையாளம் என்றால் அந்த சினிமா எப்படி இருக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக அப்படிப்பட்ட படங்களை தான் கடந்த 14 வருடங்களாக நாங்கள் தேர்வு செய்து வருகிறோம். அந்த வகையில் தம்பி கிட்டு மேதகு திரைப்படத்தை கலைக்கூத்து வழியாக அழகான கதை நகர்த்தல் மூலம் சொல்லி இருந்தார். தமிழகமாக இருந்தாலும் தமிழீழமாக இருந்தாலும் போதை வஸ்து, வன்முறை கலாச்சாரம் இவற்றை விதைக்கும் விதமாகத்தான் படங்கள் வருகின்றன என்பது வருத்தமாக இருக்கிறது, சல்லியர்கள் போன்ற படங்கள் தமிழகத்திலும் சரி, வெளிநாட்டிலும் சரி வெளியாவதற்கு நிறைய போராட வேண்டி இருக்கிறது. அதையெல்லாம் தாண்டி இந்த படத்தை வெளிக்கொண்டு வருவோம்" என்று கூறினார்.

நடிகர் சேது கருணாஸ் பேசும்போது, "இந்த படத்தை எடுக்க வேண்டும் என கிட்டு முடிவு செய்தபோது என்னிடம் பரமக்குடியை சேர்ந்த இராவணனை அழைத்து வந்தார். பெரிய வசதி வாய்ப்புகள் எல்லாம் இல்லாதவர். ஆனால் இந்த படம் எடுப்பதற்கு முன்பணமாக 10 லட்சம் ரூபாய் கொடுத்து துவக்கி வைத்தவர் இவர்தான். இப்படி சாதாரண கிராமத்தில் இருக்கும் ஒருவருக்கே இந்த உணர்வு இருக்கும்போது, சினிமாவில் இருக்கும் எனக்கு இந்த மொழியால், இனத்தால் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஏதாவது செய்யக்கூடாதா என்கிற வெறி ஏற்பட்டது. தமிழர்களின் மறைக்கப்பட்ட வரலாறுகளை எடுத்துச் சொல்லுங்கள். அதற்கு நான் உங்களுடன் உறுதுணையாக நிற்கிறேன் என்று சொல்லி ஒரு உத்வேகத்தை கொடுத்து இந்த நிமிடம் வரை எனக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய தம்பி கரிகாலனுக்கு இந்த நேரத்தில் நான் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கிட்டு இயக்கிய 'மேதகு' படத்தை பார்த்து விட்டுத்தான் இந்த படம் பண்ணும் எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இதையும் சரியாக பண்ணியிருக்கிறார். அவர் என்ன கேட்டாரோ ஒரு தயாரிப்பாளராக அதை சிறப்பாக நான் செய்து கொடுத்திருக்கிறேன். அவரும் இந்த படத்திற்கு நேர்மையாக, உண்மையாக உழைத்திருக்கிறார், பிப்ரவரி மாதத்தில் இந்த படத்தை ரிலீஸ் செய்ய இருக்கிறோம். தமிழ் சினிமாவில் ஒரு பிரச்சனைக்குரிய, ஒரு இன அழிப்பை பற்றிய வரலாற்று பதிவாக பண்ண வேண்டும் என்று சொல்லி, அதை படமாக எடுத்து தணிக்கை அதிகாரிகளிடம் சான்றிதழ் பெற்ற முதல் படம் எனக்குத் தெரிந்து இதுவாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன்.

இந்த படத்தை எடுத்ததற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், என்னுடைய மகன் கென் தான். இந்த படத்திற்கு அவன் தான் இசையமைத்திருக்கிறான். ஆனால் என் பையன் என்னிடம் கேட்ட கேள்வி என்னவென்றால் இவ்வளவு வறண்ட, இவ்வளவு சீரியஸான, இந்த மாதிரியான ஒரு படத்தை இப்போ கஷ்டப்படுகிற நேரத்தில் எதற்காக காசு செலவு பண்ணி எடுக்கிறீர்கள் என்று கேட்டான். காதலிக்கும்போது கூட மண், இனம், மொழி என்று தான் பேசுகிறார்கள், இதையெல்லாம் யார் இந்த காலத்தில் ஏற்றுக்கொள்வார்கள் என்றான். அவனிடம் இது நடந்த காலகட்டம் அப்போது.. போராளிகள் காதலித்து திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.. நானும் நிறைய பேரை பார்த்திருக்கிறேன்.. ஆனால் அந்த காதலில் கூட அவர்களிடம் ஒழுக்கமும் அறமும் இருந்தது. அது உங்களுக்கு புரியவில்லை. 21 வயது பையன் உனக்கே புரியவில்லை என்றால் அடுத்த தலைமுறைக்கு இது சுத்தமாக தெரியாமல் போய்விடுமே என்பதற்காகத்தான் இந்த படத்தை எடுத்தேன்.. அப்பா உனக்காக காசு பணம் நிறைய சேர்த்து வைக்கவில்லை என வருத்தப்படாதே.. எதிர்காலத்தில் நடிகராகவோ, ஏதோ ஒரு இடத்தை பிடித்து விடுவாய். அப்படியே ஆனாலும் கூட வரக்கூடிய காலங்களில் நடிகர் கருணாஸின் பையன், எம்எல்ஏ கருணாஸின் பையன் என்று சொல்வதை விட சல்லியர்கள் என ஒரு படத்தை எடுத்தானே அவனுடைய பிள்ளை என்கிற ஒரு அடையாளத்தை உனக்கு நான் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதற்காத்தான் இந்த படத்தை எடுத்தேன். இதுதான் நான் உனக்கு கொடுக்கும் சொத்து என்றேன். உண்மையிலேயே அந்த உணர்வில் தான் இந்த படத்தை எடுத்திருக்கிறேன். எல்லோரும் நமக்கென்ன என்று போய்விட்டால் வேறு யார் தான் செய்வது? நம் தமிழகம், நம்ம ஊர்.. இந்த ஊரில் எல்லோரும் வாழலாம்.. ஆனால் நம்மை ஆள்பவன் தமிழனாக இருக்க வேண்டும்" என்று கூறினார்.

நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் பேசும்போது, "சல்லியர்கள் என்பதை ஒரு படம் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அது ஒரு ஆவணம்.. வேரை இழந்த மரமும் வரலாற்றை மறந்துவிட்ட இனமும் வாழாது.. தன் இன வரலாறு தெரியாத எந்த இனமும் எழுச்சி பெற முடியாது.. என் இனத்திற்கு என்று வரலாறே கிடையாது.. ஏனென்றால் வரலாற்றை படைப்பவனுக்கு வரலாற்றை எழுத நேரம் கிடைக்காது. தமிழர் இன வரலாறை நீங்கள் பார்த்துக் கொண்டே வந்தால் எதிரிகளால் வீழ்த்தப்பட்டதே கிடையாது. உடன்பிறந்த ரத்த சொந்தங்களின் துரோகங்களால் தான் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள் இறுதியாக எங்கள் தலைவர் உட்பட.

கற்றறிவை விட பட்டறிவு மேலானது. அதனால் தான் என் தலைவர் மேதகு பிரபாகரன் எல்லாவற்றையும் ஆவணப்படுத்தினார். ஆனால் இறுதிப் போரில் அவற்றில் பாதிக்கு மேல் சிதைந்து அழிந்து விட்டது. அவருக்கு ஒரு பேரார்வம் இருந்தது. சிண்ட்லர்ஸ் லிஸ்ட் ,போல பிரேவ் ஹார்ட் போல, டென் கமான்மெண்ட்ஸ் போல நம்முடைய விடுதலைப் போராட்ட வரலாறும் படமாக வர வேண்டும் என்று பெரிய அளவில் ஆர்வப்பட்டார். அதற்காகத்தான் அவர் ஆணிவேர் படத்தை தயாரித்தார். தலைவரின் படத்தை போஸ்டர்களில் அடித்து ஒட்டினாலே இங்குள்ள போலீசார் கிழித்தெறிகின்றனர். இங்குள்ள அரசியல் சூழல் அப்படி இருக்கிறது. இதை மாற்ற வேண்டும். அதன் பின்னர் தம்பி கவுதமன் சொன்னது போல அவரது வாழ்க்கை வரலாற்றை படமாக எடுக்க வேண்டும்.

விழித்துக்கொண்ட வீர மறவர்களின் வரலாறுதான் தமிழர்களுடைய வீர காவிய வரலாறு. அதில் ஒரு துளி தான் இந்த 'சல்லியர்கள்' படம். மருத்துவம் என்பதே மகத்துவம். தன் உயிரை எடுக்க வந்த ஒருவனுக்கும் உயிரைக் கொடுக்கின்ற அறம் சார்ந்த மறவர்கள் நம் தமிழர்கள் என்பதை இந்த படம் உணர்த்துகிறது. இந்த படம் இன்னும் பிரம்மாண்டமாக கூட எடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அந்த உணர்வை சிதைக்காமல் நமக்குள் கடத்தி விட்டார் கிட்டு. அதில் பிரம்மாண்டம் எதுவும் தேவைப்படவில்லை. என் தம்பி இயக்குநர் கிட்டுவிடம் குறும்படம் எடுக்கும் காலத்தில் இருந்தே படைப்பாற்றல், எழுத்தாற்றல் நிறைய இருக்கிறது. படத்தில் வசனங்கள் நன்றாகவே இருக்கிறது. காட்சி அமைப்புகளில் எதுவும் பொய் சொல்லி விட முடியாது. இலக்கியம் பொய் பேசும்.. புராணம் பொய் பேசும்.. ஆனால் வரலாறு எப்போதும் பொய் பேசாது.. பேசக்கூடாது. பகைவனாக இருந்தாலும் அன்பு காட்டுங்கள் என்பதை தான் இந்த படம் பேசுகிறது. மருத்துவ பெண் நந்தினியாக நடித்துள்ளவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். புதிதாக வந்துள்ளவர் என்று சொல்லவே முடியாது. அந்த நாட்டில், அந்த காட்டில் என்ன முகத்தைப் பார்த்தேனோ, அதேபோன்ற ஒரு முகம்.. அதேபோன்ற ஒரு போராளியின் முகம்தான் மகேந்திரன்.. கருணாஸ் நடித்துள்ள அந்தப்பகுதி இந்த படத்தின் இதயம் போன்றது. இதை ஒரு படம் என்று சொல்லாமல் ஒரு வரலாற்று பதிவு என்று தான் உலக தமிழ் சொந்தங்கள் வரவேற்க வேண்டும். நம் அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டும். வரலாறு தான் எல்லா தேசிய இனங்களுக்கும் வழிகாட்டி இருக்கிறது. நம் குழந்தைகளுக்கு இரண்டு மணி நேரம் நாம் காட்டுகின்ற ஒரு பாடமாக இதை செய்ய வேண்டும். அயோத்தி போன்ற படங்களுக்கு நாங்கள் குரல் கொடுப்பது அதை மக்கள் சாதாரணமாக கடந்து போய் விடக்கூடாது என்பதற்காகத்தான். அதனால் இந்த படத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். சமீபத்தில் வெளியான சித்தா படம் சிறப்பாக இருந்தது. பார்க்கிங் படம் கூட நன்றாக இருந்தது என என்னிடம் கூறி பார்க்க சொன்னார்கள்.. வெள்ளத்தில் சிக்கிக் கிடந்த எங்களால் எப்படி படம் பார்க்க முடியும் ? எங்களது படமே பெரிய படமாக போய்விட்டது. இந்த நாட்டை ஐந்து ஆறு முறை ஆண்ட நிர்வாக தலைவர்களைப் போல என் தலைவனுக்கு ஒரு ஐந்து ஆண்டுகள் மட்டும் இருந்திருந்தால் உலகத்தில் தலை சிறந்த வல்லாதிக்க நாடாக எங்கள் தமிழ் ஈழ நாட்டை கொண்டு போய் சேர்த்திருப்பார். ஆனால் கடைசி வரை அவர் போர்க்களத்தில் போராளி தலைவனாகவே நிற்க வேண்டியதாக போய்விட்டது. விடுதலைப் போராட்ட வீரர்களை பெருமைப்படுத்துவது போன்று, எங்களது மருத்துவ பிள்ளைகளை பெருமைப்படுத்துவது போன்று ஒரு தேன்கூட்டை தொடுவது போன்று கவனமாக இந்த பதிவை கையாண்டு இருக்கிறார்கள் கருணாஸும் இயக்குநர் கிட்டுவும்.." என்று கூறினார்.

தொழில்நுட்ப கலைஞர்கள் விபரம்

தயாரிப்பு ; சேது கருணாஸ் & கரிகாலன் இணை தயாரிப்பு ; சாத்தனூர் சிவா இயக்கம் ; கிட்டு ஒளிப்பதிவு ; சிபி சதாசிவம் இசை , கென்–ஈஸ்வர் படத்தொகுப்பு ; சி,எம் இளங்கோவன் கலை இயக்குனர் ; முஜிபூர் ரஹ்மான் ஆக்சன் ; எஸ்.ஆர்.சரவணன் விஎப்எக்ஸ் ; விக்னேஷ் மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# பிக்பாஸ் ஷாரிக் ஹாசன் நடிப்பில் கிரைம் திரில்லர் படமாக உருவாகி இருக்கும் நேற்று இந்த நேரம் படத்தின் டிரைலர் வெளியானது



சென்னை, 27 டிசம்பர் 2023: கிளாப்-இன் ஃபில்மோடெயின்மென்ட் சார்பில் நவீன் குமார் தயாரிப்பில், சாய் ரோஷன் கே.ஆர். எழுதி, இயக்கி இருக்கும் திரில்லர் திரைப்படம் "நேற்று இந்த நேரம்".

பிக்பாஸ் புகழ் ஷாரிக் ஹாசன் கதாநாயகனாக நடித்துள்ள இந்த படத்தில் ஹரிதா மற்றும் மோனிகா ரமேஷ் என இரண்டு பேர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். இந்த படத்தின் கதை, திரைக்கதை மற்றும் வசனங்களை நித்தின் ஆதித்யா மற்றும் சாய் ரோஷன் கே.ஆர். இணைந்து எழுதியுள்ளனர்.

பார்ட்டி கொண்டாட போன இடத்தில் நண்பர்கள் மர்மமான முறையில் காணாமல் போக, அதன் பின்னணியில் நடக்கும் திடுக்கிடும் சம்பவங்களை கிரைம் திரில்லர் பாணியில் உருவாகி இருக்கிறார்கள். இந்த படத்தின் படப்பிடிப்பு ஊட்டி மற்றும் சென்னையில் நடைபெற்றுள்ளது.

கெவின் என் இசையமைத்துள்ள இப்படத்திற்கு விஷால் மணிவண்ணன் ஒளிப்பதிவு செய்துள்ளார். படத்தொகுப்பு பணிகளை கோவிந்த். என் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று இந்த நேரம் படத்தின் இசை உரிமத்தை ஜீ மியூசிக் சவுத் வாங்கியுள்ளது. படத்தின் பாடல்களை இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ், அறிவு, ஆதித்யா ஆர்.கே., ரவி ஜி ஆகியோர் பாடியுள்ளனர்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் மூன்று பாடல்கள் ஏற்கனவே வெளியாகியுள்ள நிலையில், தற்போது டிரைலரை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். இது ரசிகர்களிடையே சமூக வலைத்தளத்தில் நல்ல வரவேற்பு பெற்று வருகிறது. இப்படம் ஜனவரி 5 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது.

# இயக்குநர் ஷங்கர் தயாரிப்பில் வடிவேலு நாயகனாக நடித்து பெரும் வெற்றி பெற்ற 'இம்சை அரசன் 23-ம் புலிகேசி' மற்றும் விஜய், ஸ்ரீ தேவி, சுதீப் நடித்த 'புலி' உள்ளிட்ட திரைப்படங்களை இயக்கிய சிம்புதேவனின் புதிய பான்-இந்தியா படம்



சென்னை, 27 டிசம்பர் 2023: வித்தியாசமான கதையம்சம் கொண்ட திரைப்படங்களுக்கு சொந்தக்காரரர் இயக்குநர் சிம்புதேவன். இயக்குநர் ஷங்கர் தயாரிப்பில் வடிவேலு நாயகனாக நடித்து பெரும் வெற்றி பெற்ற 'இம்சை அரசன் 23-ம் புலிகேசி'; விஜய், ஸ்ரீ தேவி, சுதீப் நடித்த 'புலி'; பிரகாஷ் ராஜ், சந்தானம், கஞ்சா கருப்பு முதன்மை வேடங்களில் நடித்த 'அறை எண் 305-ல் கடவுள்'; ராகவா லாரன்ஸை மற்றொரு பரிமாணத்தில் வெளிப்படுத்திய 'இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம்' ஆகிய படைப்புகளை தொடர்ந்து சென்ற வருடம் இவரது படமான 'கசடதபற' சிறந்த திரைக்கதைக்கான பல விருதுகளை பெற்றது.

சரித்திரம், ஃபேண்டஸி என வித்தியாசமான படங்களை இயக்கி வெற்றி பெற்ற சிம்பு தேவன், பான்-இந்தியா படம் ஒன்றை தற்போது இயக்குகிறார்.

மாலி அண்ட் மான்வி மூவி மேக்கர்ஸ் சார்பில் பிரபா பிரேம்குமாரின் பிரமாண்ட தயாரிப்பில் முழுக்க முழுக்க கடலில் பெரும் பொருட்செலவில் உருவாக்கப்பட்டுள்ள இத்திரைப்படத்திற்கு 'போட்' என்று பெயரிடப்பட்டுள்ளது. யோகி பாபு, கௌரி ஜி கிஷன் மற்றும் பிரபல நடிகர்கள் நடித்துள்ள இத்திரைப்படம் ஒரே சமயத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய ஐந்து மொழிகளில் உருவாகி வருகிறது. முற்றிலும் வித்தியாசமான 'போட்' திரைப்படத்தின் கதை 1940-ம் ஆண்டின் பின்னணியில் நடைபெறுகிறது. சென்னை மீது ஜப்பான் குண்டு வீசியபோது உயிருக்கு பயந்து 10 பேர் ஒரு சின்ன படகில் கடலுக்குள் தப்பிக்கிறார்கள். எதிர்பாராத விதமாக நடுக்கடலில் அந்த படகு நகர முடியாமல் நின்று விடுகிறது.

அந்த பரபரப்பான சமயத்தில் படகு ஓட்டையாகி கொஞ்சம் கொஞ்சமாக மூழ்க, ஒரு பெரிய சுறாவும் படகை சுற்றிவர, படகில் உள்ளவர்கள் எப்படி தப்பித்தார்கள் என்பதே கதை. முழுக்க முழுக்க கடலில் எடுக்கப்பட்டுள்ள இப்படம் திரில்லர், ஆக்ஷன், பொலிட்டிக்கல் காமெடியாக இருக்கும்.

ஜிப்ரான் இசையமைத்துள்ள 'போட்' திரைப்படத்தின் ஒளிப்பதிவை மாதேஷ் மாணிக்கம் கையாண்டுள்ளார். படத்தொகுப்புக்கு தினேஷும் தயாரிப்பு வடிவமைப்புக்கு டி சந்தானமும் பொறுப்பேற்றுள்ளனர். 'போட்' திரைப்படம் வரும் பிப்ரவரியில் ஐந்து மொழிகளில் வெளியாகும் என தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# போக்குவரத்தின் எதிர்காலத்திற்கான ஒரு பசுமையான பாதையை உருவாக்கும் டாடா மோட்டார்ஸ்

சென்னை, 27 டிசம்பர் 2023: இந்தியாவின் நகரமயமாக்கல் மற்றும் நிலையான இயக்கம் மீது அதிகரித்து வரும் கவனத்தின் மத்தியில், தூய்மையான போக்குவரத்து விருப்பங்களை நோக்கி நகர்வது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. மின்சாரம் மற்றும் ஹைட்ரஜன் செல் அடிப்படையிலான வாகனங்களை நோக்கி நாடு நகரும் நிலையில், உமிழ்வைக் குறைக்க இடைக்காலத் தீர்வுக்கான அவசரத் தேவை உள்ளது. இயற்கை எரிவாயு, 'மாற்ற எரிபொருளாக' அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது ஒரு சிறந்த பாலமாக செயல்படுகிறது. இந்தியாவின் முன்னணி ஆட்டோமொபைல் நிறுவனமான டாடா மோட்டார்ஸ், இயற்கை எரிவாயுவில் இயங்கும் வாகனங்களின் வளர்ச்சியில் தீவிரமாகப் பங்காற்றி வருகிறது. புதுமைக்கான அதன் நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிப்பை மேம்படுத்துவதன் மூலம், இந்தியாவில் நிலையான போக்குவரத்துக்கான மாற்றத்தை வடிவமைப்பதில் டாடா மோட்டார்ஸ் முக்கிய பங்கு வகிக்கிறது.

இயற்கை எரிவாயு அடிப்படையிலான எரிபொருளுக்கு மாற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, 2050 ஆம் ஆண்டுக்குள் இந்திய சாலைகளில் லாரிகள் நான்கு மடங்கு அதிகரிக்கும் என்று நிதி ஆயோக் அறிக்கை திட்டமிட்டுள்ளது. வர்த்தக வாகனத் துறையில் சுற்றுச்சூழல், பொது சுகாதாரம் மற்றும் பொருளாதார நிலைத்தன்மைக்கு இந்த மாற்றம் முக்கியமானது. உமிழ்வு குறைப்பு மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்தியா, கம்பிரஸ்டு நேச்சுரல் கேஸை (சி என் ஜி ) தீவிரமாக ஊக்குவிக்கிறது. சி என் ஜி பொருளாதார நன்மைகளை வழங்குகிறது, இது இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி கட்டணத்தை குறைக்கும். புத்தாக்கம் மற்றும் நிலையான போக்குவரத்து தீர்வுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட டாடா மோட்டார்ஸ், சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் திறமையான போக்குவரத்து அமைப்புக்கான இந்தியாவின் அபிலாஷைகளுக்கு ஏற்ப, வணிக வாகனத் துறையில் சி என் ஜி - ஐ ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அறிக்கைகளின்படி, தமிழ்நாட்டில் 150க்கும் மேற்பட்ட சி என் ஜி நிலையங்கள் உள்ளன, இது தூய்மையான எரிபொருள் விருப்பங்களின் பரவலான அணுகலுக்கு பங்களிக்கிறது.

2030க்குள் 17,000 செயல்பாட்டு சி என் ஜி நிலையங்களை உருவாக்குவதற்கான திட்டங்களுடன் இந்தியா தனது இயற்கை எரிவாயு உள்கட்டமைப்பில் மூலோபாய ரீதியாக முதலீடு செய்கிறது. எரிவாயு கட்டம், கூடுதல் எல் என் ஜி டெர்மினல்கள் மற்றும் பயோ- சி என் ஜிக்கான எஸ் ஏ டி ஏ டி திட்டம் போன்ற இயற்கை எரிவாயு அணுகலை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வரிச் சலுகைகள் மற்றும் மானியங்கள் போன்ற சலுகைகள் எரிவாயு அடிப்படையிலான வாகனங்களை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கின்றன. புதிய இயற்கை எரிவாயு விலை நிர்ணய பொறிமுறைக்கு அரசாங்கத்தின் ஒப்புதல் பெட்ரோல் மற்றும் டீசலை ஒப்பிடும்போது சி என் ஜி மலிவு விலையை மேலும் அதிகரிக்கிறது, இது இந்தியாவின் நிலையான போக்குவரத்து பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.

டாடா மோட்டார்ஸின் டிரக்குகள் பிரிவின், துணைத்தலைவரும், வணிகத்தலைவருமான திரு. ராஜேஷ் கௌல் அவர்கள், "டாடா மோட்டார்ஸில், நிலையான எரிபொருளுக்கான மாற்றத்தில் நாங்கள் முன்னணியில் இருக்கிறோம். எங்களின் பரந்த அளவிலான சி என் ஜி-மூலம் இயங்கும் வணிக வாகனங்கள் 2045 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான எங்கள் அர்ப்பணிப்புடன், நிலையான லாஜிஸ்டிக்ஸ் பிரிவில் நாங்கள் முன்னணியில் இருக்கிறோம். எங்கள் காட்சிப்பொருள் ஆட்டோ எக்ஸ்போ 2023 இல் இயற்கை எரிவாயு, மின்சாரம் மற்றும் ஹைட்ரஜன் விருப்பங்கள் போக்குவரத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் எங்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. சி என் ஜி - மூலம் இயங்கும் வாகனங்களுக்கான தேவை அதிகரித்து, சாதகமான இயக்க பொருளாதாரம் மற்றும் அதிகரித்து வரும் கிடைக்கும் தன்மை ஆகியவற்றால் இயக்கப்படும், இயற்கை எரிவாயு முக்கிய பங்கு வகிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். பூஜ்ஜிய மாசு உமிழ்வு வாகனங்களை நோக்கிய தொழில்துறையின் பயணத்தில் பங்கு. ஒன்றாக, பசுமையான மற்றும் திறமையான எதிர்காலத்தை நோக்கி பயணிக்கிறோம்."

# க்ரீவ்ஸ் ரீடெய்ல் சென்னையில் ஆட்டோஈவிமார்ட்டுக்கான தனது முதல் 'மாஸ்டர் டிஸ்ட்ரிபியூட்டர் அவுட்லெட்டை' திறந்து வைத்துள்ளது



சென்னை, 27 டிசம்பர் 2023: க்ரீவ்ஸ் ரீடெய்ல், இந்தியாவின் முன்னணி எரிபொருள்-அஞ்ஞான இயக்கம் தீர்வுகள் வழங்குநர் மற்றும் க்ரீவ்ஸ் காட்டன் லிமிடெட்டின் ஒரு பிரிவானது, சென்னையில் உள்ள ஆட்டோஈவிமார்ட் இன் முதல் மாஸ்டர் விநியோகஸ்தர் விற்பனை நிலையத்துடன் சந்தை அணுகலுக்கான புதிய மாதிரியை உருவாக்குகிறது. புழல், தண்டல்காலனி கிராமம், ஜி என் டி சாலையில் அமைந்துள்ள இந்த விற்பனை நிலையம் கிரீவ்ஸ் ரீடெய்ல் நிறுவனத்தின் மூத்த தலைவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த முன்னோடி கருத்து, போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் டீலர்களுக்கான குறைந்தபட்ச ஆர்டர் அளவுகள் (எம் ஓ கியூ) போன்ற முக்கிய கவலைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் மின்சார 3-சக்கர வாகனத் தொழிலில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது தொழில்துறை மாற்றத்திற்கான க்ரீவ்ஸ் ரீடெய்லின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

ஆட்டோஈவிமார்ட் மற்றும் தொடர்புடைய ஓ ஈ எம்களுக்கு, முதன்மை விநியோகஸ்தர் விற்பனையாளர் கருத்து வளர்ச்சி இயக்கியாக செயல்படும், ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் நேரடி ஈடுபாடு இல்லாமல் சந்தை விரிவாக்கத்தை எளிதாக்கும். இது அன்றாட செயல்பாடுகளை நிர்வகிப்பதில் முதன்மை சில்லறை விற்பனையாளரின் நிபுணத்துவத்தை மேம்படுத்தும் அதே வேளையில், மூலோபாய வளர்ச்சி முயற்சிகள் மற்றும் பிராண்ட் மேம்பாட்டில் கவனம் செலுத்த ஓ ஈ எம்களுக்கு உதவும். முதன்மை சில்லறை விற்பனையாளர் உள்ளூர் தொடர்பு மையமாக பணியாற்றுவதால், வாடிக்கையாளர் சேவை உயர்த்தப்படும், சந்தேகங்களுக்கு உடனடி பதில்கள், உத்தரவாத உரிமைகோரல்களை திறம்பட நிர்வகித்தல் மற்றும் விரைவான சிக்கல் தீர்வு ஆகியவற்றை உறுதி செய்யும்.

சென்னையில் உள்ள மாஸ்டர் டிஸ்ட்ரிபியூட்டர் அவுட்லெட் நகரம் முழுவதும் பல டீலர்ஷிப்களை நிறுவுவதற்கான தொடக்கத் தளமாக செயல்படும், இது சந்தை அணுகலை ஊக்குவிக்கும். இந்த புதுமையான அணுகுமுறை சிறிய டீலர்ஷிப்களுக்கு பல்வேறு ஓ ஈ எம்களில் இருந்து பல்வேறு வகையான மின்சார 3-சக்கர வாகனங்களை அணுக உதவுகிறது. மேலும் பல்வேறு வாடிக்கையாளர் விருப்பங்கள் மற்றும் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது, இறுதியில் விற்பனை திறனை அதிகரிக்கும்.

"ஆட்டோஈவிமார்ட் ஈ3டபிள்யூ மாஸ்டர் விநியோகஸ்தர் ஃபிரான்சைஸி அவுட்லெட் சென்னை நகரில் தொடங்கப்படுவதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இது சந்தை அணுகலை மேம்படுத்துவதற்கும், டீலர்ஷிப்களை பலவிதமான மின்சார 3-சக்கர வாகனங்களை வழங்குவதற்கு அதிகாரம் அளிப்பதற்கும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும். சென்னை இந்தியாவில் ஒரு முக்கிய பொருளாதார சக்தியாக உள்ளது. மின்சார சிறிய வணிக வாகனங்களின் வளர்ச்சி குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். வணிக வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச வாகன இயக்க நேரத்தை உறுதி செய்வதற்காக கிரீவ்ஸ் ரீடெய்லின் மின்சார வாகன உதிரி பாகங்கள் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு ஆதரவாக இருக்கும்.என " கிரீவ்ஸ் ரீடெய்ல் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி நரசிம்ம ஜெயக்குமார் தெரிவித்தார்.

ஒமேகா சேய்கி மொபிலிட்டி (ஓ எஸ் எம்) இன் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் சேவையின் இயக்குனர் திரு விவேக் தவான், "ஓ எஸ் எம்இல், க்ரீவ்ஸ் ரீடெய்லுடன் எங்கள் ஒத்துழைப்பை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த கூட்டாண்மை இந்தியாவின் மின்மயமாக்கல் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க படியை குறிக்கிறது, எங்கள் ஐந்து தசாப்த கால உற்பத்தி நிபுணத்துவத்தை க்ரீவ்ஸ் சில்லறை விற்பனையின் வலுவான முக்கிய மதிப்புகளுடன் இணைக்கிறது. ஒன்றாக, இந்திய ஈ வி துறையில் புதிய வரையறைகளை அமைப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். விற்பனை, உதிரிபாகங்கள், சேவை மற்றும் சூப்பர்சார்ஜிங் ஆகியவற்றை உள்ளடக்கிய 4எஸ் தர நிலையை கடைபிடிப்பது இந்த புதிய விற்பனை நிலையங்களை வேறுபடுத்துகிறது. இந்த முழுமையான அணுகுமுறையானது, வரும் தலைமுறையினருக்கு தூய்மையான, பசுமையான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றிய நமது பார்வையைப் பிரதிபலிக்கும் வகையில், அனைத்தையும் உள்ளடக்கிய வாடிக்கையாளர் அனுபவத்தை உறுதி செய்கிறது. மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் நிலையான நடைமுறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், நாங்கள் பொருட்களை விற்பனை செய்வது மட்டுமல்ல; அனைவருக்கும் பயனளிக்கும் ஒரு நிலையான சுற்றுச்சூழல் அமைப்பிற்கு நாங்கள் பங்களிக்கிறோம். எங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகள், ஒரு நிலையான மற்றும் மின்மயமாக்கப்பட்ட எதிர்காலத்தை உருவாக்குவதில் ஒரு உத்வேகமாக அடையாளப்படுத்துகின்றன, இது ஓ எஸ் எம்இன் புதுமை, சிறப்பம்சம் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு பற்றிய நோக்கத்தை எதிரொலிக்கிறது."

புழல், ஆட்டோஈவிமார்ட் மாஸ்டர் டிஸ்ட்ரிபியூட்டர் அவுட்லெட்டின் உரிமையாளர் ஸ்ரீவந்த் கூறுகையில், "ஆட்டோஈவிமார்ட் இன் முன்னோடி மாஸ்டர் விநியோகஸ்தர் ஸ்டோர் வாடிக்கையாளர் சேவையை மறுவரையறை செய்து, ஓ ஈ எம் விரிவாக்கத்தை இயக்கி, மின்சார இயக்கத்திற்கான மாறும் எதிர்காலத்திற்கு வழிவகுக்கும். ஒரு பெருமைமிக்க சில்லறை விற்பனையாளராக, பலதரப்பட்ட மின்சார 3-சக்கர வாகனங்களுக்கான ஒரு-நிறுத்தக் கடையை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இது நிலையான மற்றும் தடையற்ற இயக்கம் அனுபவத்திற்கான அர்ப்பணிப்பாகும்."

# ஐ.எம்.டி.பியின் இந்தியாவிற்கான 250 தலைசிறந்த திரைப்படங்கள் பட்டியலில் 2023 இல் வெளியான ஐந்து திரைப்படங்கள் இடம் பெற்றுள்ளன

சென்னை, 27 டிசம்பர் 2023: ஐ.எம்.டி.பி (www.imdb.com), திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், மற்றும் பிரபலங்கள் ஆகியவை சம்மந்தமான தகவல்களுக்கு மிகவும் பிரபலமானதும் அதிகாரப்பூர்வமானதுமான இந்நிறுவனம், இந்தியாவிற்கான 250 தலைசிறந்த திரைப்படங்களின் பட்டியிலில் 2023 ஆம் ஆண்டு வெளியான ஐந்து திரைப்படங்கள் இடம்பெற்றுள்ளது என்ற தகவலை வெளியிட்டுள்ளது. ஐ.எம்.டி.பியின் 250 தலைசிறந்த திரைப்படங்கள் பட்டியல் என்பது இந்தியத் திரைப்படங்களில் அதிக-தரமதிப்பீடு செய்யப்பட்டவற்றின் ஒரு தொகுப்பாகும், இது அனைத்துக் காலக்கட்டங்களிலும் வெளியான பல்வேறு வகையான மற்றும் பிராந்தியங்களைச் சேர்ந்த அற்புதமான புதிய திரைப்படங்கள் மற்றும் பழைய திரைப்படங்களையும் கண்டறிந்து அவற்றைப் பார்த்து மகிழும் வாய்ப்பினை ரசிகர்களுக்கு வழங்குகிறது. இந்த பட்டியலில் உள்ள தலைப்புகள் யாவும் தொடர்ச்சியாக ஐ.எம்.டி.பியில் வாக்களிக்கும் அதன் பயனர்கள் வழங்கும் தரமதிப்பீட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது. இந்த பட்டியலில் இடம்பெறும் திரைப்படங்களில் உள்ளடங்குபவை: விது வினோத் சோப்ரா அவர்களின் 12த் ஃபெயில் (ஹிந்தி); மனோஜ் பாஜ்பேயி அவர்களின் மிகவும் புகழ்பெற்ற நீதிமன்ற காட்சிகள் நிறைந்த திரைப்படமான சிர்ஃப் எக் பந்தா காஃபி ஹை (ஹிந்தி); குற்றத்-திரில்லர் திரைப்படமான போர் தொழில் (தமிழ்); சூரி மற்றும் விஜய் சேதுபதி நடித்துள்ள ஆக்ஷன்-திரைப்படமான விடுதலை பகுதி 1 (தமிழ்); மற்றும் உயிர்வாழப் போராடும் திரைப்படமா 2018 (மலையாளம்). டிசம்பர் 20, 2024 இன்படி ஐ.எம்.டி.பி தரமதிப்பீடுகள் மற்றும் பட்டியல் தரநிலைகள்:

1. 12த் ஃபெயில், 9.2 புள்ளிகளுடன் 20வது இடத்தில் உள்ளது
2. 2018, 8.4 புள்ளிகளுடன் 104வது இடத்தில் உள்ளது
3. விடுதலை பகுதி 1 8.3 புள்ளிகளுடன் 139வது இடத்தில் உள்ளது
4. சிர்ஃப் எக் பந்தா காஃபி ஹை, 7.9 புள்ளிகளுடன் 163வது இடத்தில் உள்ளது
5. போர் தொழில், 8.0 புள்ளிகளுடன் 193வது இடத்தில் உள்ளது

இந்த முழு பட்டியலையும் இங்கே பாருங்கள் https://www.imdb.com/india/top-rated-indian-movies/. ஐ.எம்.டி.பி பயனர்கள் இவற்றையும் இன்னும் பல திரைப்படங்களையும் இந்த இணைப்பில் தங்களது ஐ.எம்.டி.பி வாச்லிஸ்டில் சேர்க்க முடியும் https://www.imdb.com/watchlist.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் 'விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ரா' திட்டம் அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் அதிகாரபூர்வமாகத் தொடங்கி வைத்தார்



சென்னை, 27 டிசம்பர் 2023: சென்னையில் கல்விப் பணியில் சிறந்து விளங்கும் முன்னணி கல்வி நிறுவனமான அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில், விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ரா திட்டத்தை டிசம்பர் 22,2023 அன்று மாண்புமிகு இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் சிங் தாக்கூர்,,கியான் பவனில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார். மேலும் இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் இணைய தகவல் சேவை மற்றும் பத்திரிகை தகவல் அலுவலகத்தின் கூடுதல் தலைமை நிர்வாக இயக்குநர் திரு. எம். அண்ணாதுரை மற்றும் தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் நேரு இளைஞர் மைய சங்கத்தின் மாநில இயக்குநர், கே. குன்ஹம்மது ஆகியோர் கலந்து கொண்டனர். பெருஞ்சிறப்பு வாய்ந்த இவ்விழா, மத்திய அரசின் முக்கியமான திட்டங்களை மேம்படுத்தப்படுத்தல், செயலாக்கம் பெறுவதைப் பார்வையிடுதல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

அரசாங்கத்தின் விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ரா திட்டம் ,ஆயுஷ்மான் பாரத், உஜ்வாலா யோஜனா, பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா, பிரதமர் ஸ்வநிதி திட்டம் மற்றும் பிற முதன்மைத் திட்டங்கள் மூலமாகப் பயனடையக் கூடிய தகுதியான நபர்களை அடையாளம் காணும் பொருட்டும், திட்டங்கள் அவர்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் திட்டங்களை நாடுமுழுவதிலுமுள்ள பயனாளிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஜார்கண்ட் மாநிலம் குந்தியில் இருந்து நவம்பர் 15 அன்று மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் யாத்திரை தொடங்கி வைக்கப்பட்டது.

மாணவர்களிடையே உரையாற்றிய மாண்புமிகு இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் சிங் தாக்கூர் கூறுகையில், "விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ரா திட்டம்" இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு சமூகத்தினரையும் ஒருங்கிணைத்து நல்ல மாற்றத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது." கல்வி மற்றும் திறன் மேம்பாடு முதல் சுகாதாரம் மற்றும் சமூக நலன்" வரையிலான வளர்ச்சியின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இத்திட்டங்கள் அமைந்துள்ளன. இந்த முயற்சியானது, மக்களுக்குரிய அதிகாரத்தை அளிப்பதற்கும்,, இந்திய மக்களின் ஒட்டுமொத்த முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுக்கும் தன் பங்களிப்பைச் செய்யக் கூடியதாகவும் உள்ளது." அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள தொடர் முயற்சிகளையும் அமைச்சர் குறிப்பிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் புலத்தலைவர் டாக்டர்ம. மரம்யா, அவர்கள் கூறுகையில், "மாண்புமிகு அமைச்சர் திரு. அனுராக் சிங் தாக்கூர் அவர்களால் அதிகாரபூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்ட "விக்சித் பாரத் சங்கல்ப் யாத்திரை" திட்டம் நமது நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் அரசாங்கத் திட்டங்களின் பலன்களைக் கொண்டு சேர்க்க வேண்டும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள கூட்டு முயற்சியை வெளிப்படுத்தும் முகமாக அமைந்துள்ளது. இம்முயற்சியில் அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியும் தன் பங்களிப்பை அளிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது, மேலும் ஒருங்கிணைந்த இம்முயற்சிகளின் மூலம், திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில் உள்ள இடைவெளிகளைக் குறைக்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மக்களிடையே மாற்றத்தை உருவாக்கவும் முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இப்பயணம் வலிமை பொருந்திய பாரதத்தை உருவாக்குவதற்கான தொடக்கப் புள்ளியாக விளங்குகிறது.."

அரசாங்கத்தின் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு இல்லாதவர்களிடமும், நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே இந்த நாடு தழுவிய பிரச்சாரத்தின் இலக்காகும். யாத்திரையின் இலக்கு, அனைத்து கிராம பஞ்சாயத்துகள், நகர பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இத்திட்டம், "திட்டம் குறித்த விழிப்புணர்விலாதவர்களைச் சென்றடைதல், அது குறித்த தகவல்களைப் பரப்புதல், திட்டம் குறித்த அனுபவ அறிவை மக்களுடன் பகிர்தல், பயனாளிகளை அடையாளம் காணல் "ஆகிய நான்கு முதன்மை நோக்கங்களை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது" என்றிவ்வாறு தன் கருத்தைப் பதிவு செய்தார்.

இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் சிங் தாக்கூர், 'மேரா யுவ பாரத்' என்னும் தலைப்பில் அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

# முத்தூட் ஃபின்கார்ப் நிறுவனம், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா இடமிருந்து என் சி டி களின் தனிப்பட்ட ஒதுக்கீட்டு முறை வழியாக ரூ. 200 கோடியை திரட்டியது



சென்னை, 27 டிசம்பர் 2023: 136 ஆண்டுகள் பழமையான முத்தூட் பாப்பச்சன் குழுமத்தின் (முத்தூட் புளூ) முதன்மை நிறுவனமான முத்தூட் ஃபின்கார்ப் நாட்டின் மிகப்பெரிய வங்கியான ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மூலம், என் சி டி களில் தனிப்பட்ட ஒதுக்கீட்டு முறையின் கீழ் ஒவ்வொரு என் சி டிக்கும் ரூ. 1 லட்சத்தின் ஒரு முக மதிப்பு கொண்ட ரூ.200 கோடி முதலீட்டை அறிவித்துள்ளது. அரையாண்டுக்கு ஒருமுறை வட்டி செலுத்தப்படும் இடைவெளிகளுடன் இந்த வெளியீட்டின் முதிர்வு/கால வரையறை விருப்பங்கள் ஐந்து வருடங்களாகும். இந்த பாதுகாக்கப்பட்ட வழங்கப்பட்ட என் சி டிகள் ஈரிசில் ஆல் எ எ-/ ஸ்டேபிள் என மதிப்பிடப்பட்டு பி எஸ் ஈ யின் கடன் சந்தைப் பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ளன.

"நம்பிக்கையும் நாணயமும் முத்தூட்ஃபின்கார்ப் நிறுவனத்திற்கு முக்கிய மதிப்புக்களாக இருக்கின்றன. இந்தியாவின் மிகப்பெரிய வங்கி, வெளியிடப்பட்ட என் சி டி களில் முதலீடு செய்துள்ளதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இந்த திரட்டுதல் எதிர்கால கடன் வழங்குதல், வணிக செயல்பாடுகள் மற்றும் மேலும் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். எங்கள் வாடிக்கையாளர்களின் வாழ்நாள் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதுமையான திட்டங்கள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்த நாங்கள் மேலும் முயற்சிப்போம். இன்று, எங்கள் மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நம்பிக்கையை அளித்து, இந்த ஆண்டுகள் முழுவதும் எங்களுக்கு ஆதரவளித்து, சாமானியர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், நிதிச் சேர்க்கையை செயல்படுத்தவும் எங்களுக்கு உதவுவதற்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்." என்று முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் இன் தலைமை நிர்வாக அதிகாரி ஷாஜி வர்கீஸ், கூறினார்.

முத்தூட் ஃபின்கார்ப், இந்தியா முழுவதும் அதன் 3600க்கும் மேற்பட்ட கிளைகள் மூலம் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தின் நிதி சேர்க்கையின் இலக்கை நோக்கிச் செயல்படுகிறது. தங்கக் கடன்கள், வியாபார்மித்ரா வணிகக் கடன்கள், இரு சக்கர வாகனக் கடன்கள், பயன்படுத்திய கார் கடன்கள், வீட்டுக் கடன்கள், சொத்து மீதான கடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச பணப் பரிமாற்றம், அந்நியச் செலாவணி, காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் சேவைகள், செல்வ மேலாண்மைச் சேவைகள், மற்றும் பல போன்றவை எங்கள் வழங்கல்கல் சிலவற்றில் அடங்கும்.

# கேம்பிரிட்ஜ் யுனிவர்சிட்டி பிரஸ் & அசெஸ்மென்ட் இன்டஸ்ட்ரி-அகாடமியா கனெக்ட் மாநாட்டை சென்னையில் வெற்றிகரமாக நடத்துகிறது

சென்னை, 27 டிசம்பர் 2023: கேம்பிரிட்ஜ் யுனிவர்சிட்டி பிரஸ் & அசெஸ்மென்ட், அதன் தொழில்-அகாடமியா கனெக்ட் மாநாட்டை சென்னை தாஜ் கிளப் ஹவுஸில் சமீபத்தில் நடத்தி முடித்தது. "புதுமை, தலைமை, வெற்றி: புதிய வேலை காலத்தில் கார்ப்பரேட் எதிர்பார்ப்புகள்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வளாக வேலைவாய்ப்புகளின் போது புதிய திறமைகளை ஆட்சேர்ப்பு செய்வதில் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ள கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் முக்கிய பங்குதாரர்கள் ஒன்றிணைந்தனர்.

மாநாடு மென் திறன்கள், தகவல் தொடர்பு மற்றும் மொழி புலமை ஆகியவற்றில் நிலவும் போராட்டங்களை எடுத்துரைத்து, முழுமையான வளர்ச்சியின் அவசியத்தை எதிரொலித்தது. தொழில்துறை எதிர்பார்ப்புகளுக்கும் கல்வித் தயார்நிலைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கும் முயற்சியாக, இந்த நிகழ்வில் ஐந்து நுண்ணறிவுமிக்க குழு விவாதங்கள் மற்றும் முழுமையான அமர்வு, உத்திகள், சவால்கள் மற்றும் ஆற்றல்மிக்க வேலைச் சந்தைக்குத் தொழிலாளர்களை தயார்படுத்துவதற்கான சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமல்லாமல், சர்வதேச நடைமுறைகளின் நுணுக்கங்களைப் புரிந்துகொண்டு வழிநடத்தக்கூடிய நிபுணர்களின் தேவை அதிகரித்து வருகிறது.

இந்தக் குழு விவாதங்கள், எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் திறமைகளை உருவாக்குதல், பட்டதாரிகளை உலக அரங்கிற்கு வடிவமைத்தல், கல்வித்துறைக்கும் தொழில்துறைக்கும் இடையே ஒரு மூலோபாயச் சீரமைப்பைக் கோரும் எதிர்காலப் பணியிடத்தின் சவால்களுக்குப் பட்டதாரிகள் நன்கு தயாராக இருப்பதை உறுதி செய்தல் போன்ற தலைப்புகளில் ஆராயப்பட்டது. கார்ப்பரேட்டுகள், சிறந்த திறமைக்கான தேடலில், கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமல்லாமல், பலதரப்பட்ட திறன்கள் மற்றும் வேகமாக மாறிவரும் பணிச்சூழலுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும் திறனுக்கும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கின்றனர். வளாக வேலைவாய்ப்பு ஒரு மூலோபாய பாலமாக வெளிப்படுகிறது, கல்வித்துறையை தொழில்துறையுடன் இணைத்து, பட்டதாரிகள் உலகளாவிய நிலப்பரப்பில் தடையற்ற மாற்றத்திற்கு தேவையான திறன்களையும் அறிவையும் பெற்றிருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்பதே ஆகும்.

தொழில்முறை வெற்றிக்காக பன்முகத் திறன்களைக் கொண்ட வேலைக்குத் தயாராக இருக்கும் பட்டதாரிகளை வளர்ப்பதற்கு கல்வியாளர்களுக்கும் தொழில்துறைக்கும் இடையே வலுவான உறவுகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை மாநாடு வலியுறுத்தியது. இந்த நிகழ்வில் தென்னிந்தியா முழுவதிலும் உள்ள புகழ்பெற்ற நிறுவனங்களின் துணைவேந்தர்கள், பதிவாளர்கள், டீன்கள், திறன் மற்றும் வேலை வாய்ப்பு இயக்குநர்கள் உள்ளிட்ட முக்கிய மூத்த தலைவர்கள் பங்கேற்று, இடைவெளியைக் குறைப்பதில் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டினர்.

கேம்பிரிட்ஜ் யுனிவர்சிட்டி பிரஸ் & அசெஸ்மென்ட், இந்தியா, தொழில்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பை வளர்ப்பதன் மூலம் இந்த சவால்களை எதிர்கொள்வதற்கான தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியது.

கேம்பிரிட்ஜ் இங்கிலீஷ் பிராந்திய இயக்குனர் அருணாசலம் டி. கே., வேலைவாய்ப்பு நிலப்பரப்பில் மாற்றத்தை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார் "10 பட்டதாரிகளில் 1 பேர் மட்டுமே வேலை செய்யக்கூடியவர்கள் என்ற எதிர்மறையான பார்வை இருக்கும்போது, □□ கேம்பிரிட்ஜ் ஆங்கிலம் தீர்வின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறது அதாவது பட்டதாரிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த ஆங்கில மொழித் தொடர்புத் திறன்களையும், இந்தியாவிலும் உலகெங்கிலும் உள்ள சிறந்த தேர்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழையும் அவர்கள் பெறுகின்றனர். எனவே, கேம்பிரிட்ஜ் திறன் இடைவெளியைக் குறைக்கவும், உருவாக்கிய தளத்தைப் பயன்படுத்தவும் கேம்பிரிட்ஜ் ஆங்கிலத்துடன் கூட்டு சேருமாறு தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களையும் இணைந்து எங்களுடன் செயல்பட அழைக்கிறோம் இது உயர்தரத்துடன் கூடிய வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய நிறுவனங்களுடன் நம்மை இணைக்கிறது.

இந்த மாநாடு நன்றியுரைவுடன் நிறைவடைந்தது மற்றும் நெட்வொர்க்கிங் வாய்ப்புகளுடன்,தொழில்துறையின் கல்வித்துறை பகிரப்பட்ட பொறுப்பை வலுப்படுத்தும் வகையிலும் மற்றும் வேலைக்குத் தயாராக இருக்கும் பட்டதாரிகளை வளர்ப்பதிலும் முக்கிய நோக்கமாக கொண்டதாக அமைந்தது.

# மைச்சாங் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க பால்ரக்ஷாபாரத்துடன் கைகோர்க்க கோரிக்கை

சென்னை, 27 டிசம்பர் 2023: அன்பான ஆதரவாளர்களே, பேரழிவை ஏற்படுத்திய மைச்சாங் புயல் தென்னிந்தியாவில் அழிவின் பாதையை விட்டுச்சென்றுள்ளது, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் முழுவதும் நான்கு மாவட்டங்களில் சுமார் ஒரு கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் சென்னையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கரையோரங்களில் உள்ள தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. குறைந்தது 17 பேர் இறந்துள்ளனர் , மேலும் 41,000 க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டனர், இதில் தமிழ்நாட்டில் 32,158 பேர் மற்றும் ஆந்திராவில் 9,500 பேர் உள்ளனர். 4967 அரசு முகாம்களுக்கு மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு துப்புரவுப் பணியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளனர், மேலும் வீடு/சுகாதாரப் பொருட்கள் மற்றும் கல்விப் பொருட்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் நமது முயற்சிகள் அவசரமாக தேவைப்படுவதின் அவசியத்தை நாங்கள் உணர்கிறோம் மற்றும் பால் ரக்ஷா பாரதத்தில் எங்கள் நோக்கம் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதாகும். பால் ரக்ஷா பாரத் ஆந்திராவில் உள்ள மச்சிலிப்பட்டினம் மற்றும் நெல்லூர் மற்றும் திருவள்ளுவர் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சென்னை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி தேவைகளை பூர்த்தி செய்கிறது. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் கடலோர மாவட்டங்களாகும், அங்கு வீடுகளில் நீர் உட்புகுதல் வீடுகளின் உள்கட்டமைப்பு,வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் பிள்ளைகளின் கல்வி உபகரணங்களை சேதப்படுத்தியுள்ளது. இந்த பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க எங்களுடன் கைகோர்க்குமாறு ஊடகங்களையும், அர்ப்பணிப்புள்ள எங்களுடைய ஆதரவாளர்களையும் நாங்கள் அழைக்கிறோம்.

ஒவ்வொரு நன்கொடையும், எவ்வளவு சிறியதாக இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, சுத்தமான நீர் மற்றும் தங்குமிடம் போன்ற அத்தியாவசிய தேவையை வழங்குவதிலும் மிக முக்கியமாக மேலும் இந்த நெருக்கடியில் சிக்கி தவிக்கும் குழந்தைகளுக்கு உதவியாக இருக்கும் . மாற்றத்தை ஏற்படுத்த எங்களுடன் சேருங்கள். உங்கள் ஆதரவு, மைச்சாங் சூறாவளிக்குப் பிறகு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும், நம்பிக்கையை மீட்டெடுக்கவும் உதவும்.

நன்கொடை விவரங்கள் மற்றும் எங்கள் நிவாரண முயற்சிகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து எங்கள் வலைத்தளமான www.balrakshabharat.org ஐப் பார்வையிடவும்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# 'முடக்கறுத்தான்' திரைப்படத்தின் முன்னோட்ட வெளியீட்டு விழா



சென்னை, 27 டிசம்பர் 2023: 2020-2021-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலகளாவிய பேரிடரான கரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட 5394 நோயாளிகளை தன்னார்வத் தொண்டாக தமிழ் மருத்துவ முறையான சித்த மருத்துவத்தின் மூலம் காப்பாற்றி மாபெரும் சமூக சேவையாற்றிய சித்த மருத்துவர் டாக்டர். கே. வீரபாபு அவர்கள் சமூகத்திற்காக சமூகப் பொறுப்போடு வயல் மூவீஸ் சார்பில் எழுதி, இயக்கி, தயாரித்து, பின்னணி இசை கோர்த்து, நடித்துள்ள படம் தான் 'முடக்கறுத்தான்'. இந்த படம் குழந்தைகளை வைத்து பிச்சை எடுக்கும் குற்றத்தை கருவாக வைத்து தயாராகியுள்ளது. இத்திரைப்படத்தில் டாக்டர். கே. வீரபாபு, மஹானா, சமுத்திரக்கனி, சூப்பர் சுப்பராயன் போன்ற முன்னணி நட்சத்திரங்கள் நடித்துள்ளனர்.

இத்திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியீட்டு விழா சாலிகிராமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் டாக்டர். கே. வீரபாபு, தமிழருவி மணியன், இயக்குனர் தங்கர் பச்சான், சமுத்திரக்கனி, தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி மற்றும் திரைப்படத்தில் நடித்திருந்த நட்சத்திரங்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவில் முதலாவதாக பேசிய வீரபாபு, தனது படத்தின் மூலம் சமூகத்திற்கு தேவையான முக்கியமான கருத்துகளையும் கோரிக்கைகளையும் அரசாங்கத்திற்கு வைத்துள்ளதாக கூறினார். அவையனைத்தும் குழந்தைகள் சார்ந்த வேண்டுகோளாகவே இருக்கும் என்றும் படத்தின் கருவாக குழந்தைகளை கடத்தி அவர்களை வைத்து சாலைகளில் பிச்சை எடுக்கும் கும்பலை அழித்தொழிக்க வேண்டும் என்பதை மையமாக வைத்து படத்தை தயாரித்துள்ளதாகவும் கூறினார். அடுத்த கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுவதற்குள் அதை சந்திப்பதற்கு சித்த மருத்துவ முறையிலும் நோயாளிகளுக்கான வசதிகள் அடிப்படையிலும் தயாராக இருக்க வேண்டும் என அரசாங்கத்தை கேட்டுக் கொண்டார்.

சுரேஷ் காமாட்சி பேசும்போது டாக்டர். கே. வீரபாபு அவர்கள் எழுதி, இயக்கி, தயாரித்து நடிக்க போவதாக கூறியதை கேட்டு அவரது தன்னம்பிக்கையை பாராட்டியதாகவும், அவரது சமூகத்தின் மீதான அக்கறை அவரின் மீதான மதிப்பை அதிகப்படுத்துவதாகவும் கூறினார்.

இயக்குனர், நடிகர் சமுத்திரக்கனி அவர்கள் பேசும்போது, "தன்னுடைய கதையின் மீது நம்பிக்கை வைத்து அவர் சொல்லத் துணிந்த சமூகக் கருத்து மிக முக்கியமானது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீதான கவனத்தை செலுத்தாமல் பணம் ஈட்டுவதில் குறியாக இருப்பதால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை அறியாமல் இருந்து விடுகின்றனர். அதனால் ஏற்படும் விளைவுகளை இந்த படம் விவரிக்கிறது. கரோனா பெருந்தொற்றில் வீரபாபு பெருந்தொண்டாற்றினார். தெலுங்கு படமொன்றின் படப்பிடிப்பின் போது ஒரு காட்சியில் நிலக்கரி உடல் முழுவதும் இருக்குமாறு நடித்ததால் ஏற்பட்ட ஒவ்வாமையை வீரபாபு தீர்த்து வைத்தார்", என்றும் கூறினார்.

தங்கர் பச்சான் பேசும்போது டாக்டர். கே. வீரபாபு தனது சித்த மருத்துவத்தின் மூலம் பலருக்கு சேவையாற்றிப்பதாகவும் அவரின் இந்த படத்தின் மூலம் சிறந்த கருத்தை முன் வைத்திருப்பதாகவும் அவரைப் போன்றவர்கள் தமிழ் மண்ணுக்கு கிடைத்த கொடை என்றும், தமிழ் மக்கள் தமிழ் மருத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும், இந்த படத்தை தமிழ் மக்கள் வெற்றியடைய செய்ய வேண்டும் என்றும் வாழ்த்தி பேசினார்.

படத்தின் கதாநாயகி மஹானா பேசும்போது," வீரபாபு அவர்கள் 'ஒன் மேன் ஆர்மி' போல நடிப்பு, தயாரிப்பு, இயக்கம் என படத்தின் அனைத்து துறைகளிலும் மிகவும் சிரத்தையுடன் பணியாற்றினார். இந்த படம் பெண்கள் மற்றும் குழந்தை கடத்தலை பற்றி பேசும் படம். படப்பிடிப்பின் போதும் கூட மூலிகை உணவுகளை கொடுத்து எங்களை சிறப்பாக கவனித்து கொண்டார். மயில்சாமி, சாம்ஸ், 'காதல்' சுகுமார், அம்பானி சங்கர் போன்றோரது நகைச்சுவை நன்றாக வந்திருக்கிறது", என்றார்.

விழா நிறைவாக படக்குழுவை வாழ்த்திப் பேசிய தமிழறிஞரும் அரசியல்வாதியுமான தமிழருவி மணியன்," நான் வீரபாபுவிற்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன். கரோனா பெருதொற்றில் பாதிக்கப் பட்டிருந்த போது அவர் அளித்த சிகிச்சையால் தான் நான் இப்போது உயிருடன் உள்ளேன். ஆங்கில மருத்துவத்தால் நான் நிறைய இன்னல்களை சந்தித்தேன். அதனால் தமிழ் மக்கள் அனைவரும் தமிழ் மருத்துவத்திற்கு முக்கியத்துவம் தர வேண்டும்", என்று கேட்டு கொண்டார்.

விழா நிறைவாக படக்குழுவினர் அனைவருக்கும் மூலிகைகள் நிறைந்த பைகள் வழங்கப்பட்டன.

'முடக்கறுத்தான்' திரைப்படம் ஜனவரி-25 திரையரங்குகளில் வெளியாகிறது.

நடிகர்கள்:

டாக்டர். கே. வீரபாபு மஹானா சூப்பர் சுப்பராயன் சமுத்திரக்கனி மயில்சாமி சாம்ஸ் பாவா லட்சுமணன் 'காதல்' சுகுமார் முத்துக்காளை வைஷ்ணவி பேபி ஷாலினி ரமேஷ் தயாளன் ரமேஷ் இந்திரஜித்

தொழில்நுட்பக் குழு:

தயாரிப்பு : வயல் மூவிஸ் எழுத்து மற்றும் இயக்கம் : டாக்டர். கே. வீரபாபு இசை: சிற்பி பாடல்கள்: பழநிபாரதி ஒளிப்பதிவு: அருள் செல்வன் படத்தொகுப்பு: ஆகாஷ் ஒலிப்பதிவு: ஆண்டனி மைதீன் சண்டைப்பயிற்சி: சூப்பர் சுப்பராயன் நடனம்: நோபல் பால் கலை இயக்கம்: பிரபஞ்சன் மக்கள் தொடர்பு : ரியாஸ். கே. அஹ்மத் இணை இயக்கம் : மகேஷ் பெரியசாமி வடிவமைப்புகள் : பிளஸ்ஸன்.

# ஐ எஸ் பி எல் டி10 கிரிக்கெட் லீக்: சென்னை அணியின் உரிமத்தை பெற்றார் நடிகர் சூர்யா

சென்னை, 27 டிசம்பர் 2023: டி10 தொடர் இந்தியாவில் நடத்தப்பட இருக்கிறது. ஐஎஸ்பிஎல் என்கிற பெயரில் நடத்தப்படும் இந்த தொடரில் சென்னை, ஐதராபாத், பெங்களூரு, மும்பை, கொல்கத்தா மற்றும் ஸ்ரீநகர் ஆகிய ஆறு அணிகள் பங்கேற்க உள்ளன. மார்ச் 2-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை நடைபெறும் இந்த ஐஎஸ்பிஎல் தொடரில் பங்கேற்கும் ஒவ்வொரு அணியையும் சினிமா பிரபலங்கள் போட்டி போட்டு வாங்கி வருகின்றனர்.

அந்த வகையில் மும்பை அணியை அமிதாப் பச்சனும், பெங்களூரு அணியை பாலிவுட் நடிகர் ஹிருத்திக் ரோஷனும், ஸ்ரீநகர் அணியை



அக்ஷய் குமாரும், தெலுங்கு நடிகர் ஐதராபாத் அணியை ராம்சரணும் வாங்கினர்.

இந்நிலையில், சென்னை அணியின் உரிமையை தமிழின் முன்னணி நடிகரான சூர்யா பெற்றுள்ளார். இதனை அவர் தனது சமூக வலைதளத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். 10 ஓவர்களை கொண்ட போட்டிகளாக இந்த ஐஎஸ்பிஎல் தொடர் நடத்தப்படும். இந்த போட்டிகள் முழுவதும் டென்னிஸ் பந்தில் தான் நடத்தப்பட உள்ளது. இதில் பங்கேற்க உள்ளவர்கள் தற்போதே முன்பதிவு செய்யவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. தமிழ் நாட்டின் தெருக்களில் இருந்து விளையாட்டு வீரர்களை ஸ்டேடியத்திற்கு கொண்டு செல்வதே இந்த ஐ.எஸ்.பி.எல் - இந்தியன் ஸ்ட்ரீட் ப்ரீமியர் லீகின் நோக்கம்.

# 21வது சென்னை சர்வதேச திரைப்பட விழா -2023 (14-21 டிசம்பர் 2023) தமிழ் திரைப்படங்களுக்கான விருதுகள்



சென்னை, 27 டிசம்பர் 2023: 1. சிறந்த தமிழ் திரைப்படம்: இயக்குனருக்கு ரூ.1.0 லட்சம் மற்றும் தயாரிப்பாளருக்கு ரூ.1.0 லட்சம் படம் : அயோத்தி இயக்குனர்: ஆர். மந்திர மூர்த்தி; தயாரிப்பாளர் : டிரைடென்ட் ஆர்ட்ஸின் ஆர். ரவீந்திரன்.

2. இரண்டாவது சிறந்த தமிழ் திரைப்படம்: இயக்குனருக்கு ரூ. 50,000/- மற்றும் தயாரிப்பாளருக்கு ரூ. 50,000/- படம்: உடன்பால் இயக்குனர்: கார்த்திக் சீனிவாசன் தயாரிப்பாளர் : கே வெள்ளைதுரை

3. மேற்கூறிய இரண்டு விருதுகளில் இடம்பெறாத தனிநபருக்கு சிறப்பு ஜூரி விருது : விருது பெறுபவருக்கு ரூ.50,000/- விடுதலை படத்தின் முதல் பாகம் இயக்குனர் வெற்றி மாறன்

4. சிறந்த நடிகர்: விருது பெறுபவருக்கு ரூ.50,000/- மாமன்னன் படத்திற்காக திரு வடிவேலு அவர்களுக்கு

5. சிறந்த நடிகை: விருது பெறுபவருக்கு ரூ.50,000/- அயோத்தி படத்திற்காக செல்வி ப்ரீத்தி அஸ்ரானி அவர்களுக்கு

6. சிறந்த ஒளிப்பதிவாளர்: விருது பெறுபவருக்கு ரூ.50,000/- போர் தோழில் படத்திற்காக திரு கலைச்செல்வன் சிவாஜி அவர்களுக்கு

7. சிறந்த எடிட்டர்: விருது பெறுபவருக்கு ரூ.50,000/- போர் தோழில் படத்திற்காக திரு ஸ்ரீஜித் சாரங் அவர்களுக்கு

8. சிறந்த ஒலிப்பதிவாளர்: விருது பெறுபவருக்கு ரூ.50,000/- மாமன்னன் படத்திற்காக திரு சுரேன் ஜி அவர்களுக்கு

9. செம்பி படத்தின் குழந்தை கலைஞரான நிலாவுக்கு சிறப்புக் குறிப்புச் சான்றிதழ் தமிழ்நாடு அரசு எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன மாணவர் விருது

10. சிறந்த குறும்படம் விருது பெறுபவருக்கு ரூ.10,000/- குறும்படம் : லாஸ்ட் ஹார்ட் இயக்குனர்: பகவத் தயாரிப்பாளர்: தமிழ்நாடு அரசு எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் உலக சினிமா போட்டி விருதுகள்

11. சிறந்த திரைப்படம் சுதந்திரம்(விடுதலை) : இயக்குனர்: டியூடர் கியுர்கியு தயாரிப்பாளர்: ஓனா புஞ்கோய் கியுர்கியு நாடு : ருமேனியா

12. இரண்டாவது சிறந்த திரைப்படம் வைல்டிங் நாடு (அக்ரெஸ்டி) : டைரக்டர்: செர்ஜியோ ரோய்சன்பிளிட்; தயாரிப்பாளர்கள் : குஸ்டாவோ மாக்சிமிலியானோ, விவியன் ரோட்ரிக்ஸ், செர்ஜியோ ரோய்சன்பிளிட் நாடு : பிரேசில்

13. சிறப்பு நடுவர் விருது: இயற்கையான செயல் (சீய்ட் எஇன்பாக் வீய் இர் சேய்ட்) இயக்குனர்: ஆலிஸ் க்ருயா நாடு : ஜெர்மனி

14. சிறப்புக் குறிப்புச் சான்றிதழ்: நதாலியா சியாம், ஃபுட்பிரின்ட்ஸ் ஆன் வாட்டர் படத்தின் இயக்குனர்.

# நிலைத்தன்மையை உயர்த்துதல், 'வாடிக்கையாளரே முதல்' வழி

## நமன் குப்தா, மூத்த துணைத் தலைவர் & தலைவர் - கிளை செயல்பாடுகள், நிலைத்தன்மை & நிதிச் செயல்பாடுகள், இந்தியா ஃபர்ஸ்ட் லைஃப் ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

சென்னை, 27 டிசம்பர் 2023: போட்டிகள் நிறைந்த ஆயுள் காப்பீட்டுத் துறையில், பாலிசிதாரர்கள் தங்கள் பாலிசிகளைப் புதுப்பிக்கும் சதவீதத்தைக் குறிக்கும் நிலைத்தன்மை விகிதம், வெற்றிக்கான முக்கியமான வரையறையாகும். நிலைத்தன்மையை மேம்படுத்துவதில் #வாடிக்கையாளரே முதல் தத்துவத்தின் செயல்திறனை இந்தியா ஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் நிரூபித்துள்ளது. தனிப்பயனாக்கப்பட்ட தகவல் தொடர்பு மற்றும் புதுமையான முன்கூட்டியே காப்பீட்டுக் கட்டணம் செலுத்தும் வசதி போன்ற முயற்சிகள், நிறுவனத்தின் 13-மாத நிலைத்தன்மை விகிதத்தில் மெச்சத்தக்க எட்டு சதவீத முன்னேற்றத்திற்கு பங்களித்துள்ளது, இது 2020-இல் 75.76% ஆக இருந்து மார்ச்-2023 இல் 83% ஆக உயர்ந்துள்ளது.

காப்பீடு புதுப்பித்தல்களில் அதிகபட்ச வீழ்ச்சி முதல் ஆண்டிற்குப் பிறகு நிகழ்கிறது என்பதைப் புரிந்துகொண்டு, 13-மாத நிலைத்தன்மை விகிதம் காப்பீட்டுத் துறை மற்றும் ஒழுங்குமுறை அதிகாரிகளால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது. நிதி அழுத்தம் மற்றும் பாலிசி நன்மைகள் பற்றிய முழுமையான புரிதல் இல்லாமை ஆகியவை பாலிசி தோல்விக்கான முக்கிய காரணங்களாகும். இந்த சிக்கல்களைத் தீர்க்க, நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மையை மையமாகக் கொண்ட ஒரு விரிவான தகவல் தொடர்பு செயல்திட்டம் முக்கியமானது.

இந்தியா ஃபர்ஸ்ட் லைஃப் இன்சூரன்ஸ் காப்பீட்டுப் பத்திரத்தை அளிப்பதற்கு முன்னான முன்-வெளியீட்டுச் சரிபார்ப்பு அழைப்பைச் செயல்படுத்துவதன் மூலமும், காப்பீடு தொடர்பான ஒரு பக்க முக்கிய அம்ச ஆவணத்தை வெளியீட்டிற்குப் பிறகு அனுப்புவதன் மூலமும் செயலூக்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அத்துடன் தொடர்பு முடிவடையவில்லை; பாலிசியின் வாழ்நாள் முழுவதும் அவ்வப்போது கால முறைப்படியான புதிய தகவல்கள் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. ஜனவரி 1, 2024 முதல் வாடிக்கையாளர் தகவல் தாளுக்கான இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் முன்மொழிவு, வெளிப்படைத்தன்மைக்கான இந்த உறுதிப்பாட்டுடன் ஒத்துப்போகிறது.

பாலிசியை சரணடையச் செய்வதால் ஏற்படக்கூடிய இழப்புகளை நுகர்வோர் அடிக்கடி குறைத்து மதிப்பிடுவதோடு, புதுப்பித்தல் நினைவூட்டல்களையும் கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர். புதுப்பித்தல் சமயத்தில் பாலிசியின் செயல்திறன் குறித்த விரிவான அறிக்கை போன்ற தனிப்பயனாக்கப்பட்ட தகவல் தொடர்பு, பாலிசிதாரர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் மற்றும் சாத்தியமான பண இழப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். உத்திரவாதமான ஓய்வூதியத் திட்டத்தை உள்ளடக்கிய ஒரு கற்பனையான சூழலின் நிரூபணத்தின்படி, நேரடி சந்திப்புகள் இத்தகைய விழிப்புணர்வின் தாக்கத்தை மேலும் வலுப்படுத்தலாம்.

குறிப்பிட்ட தயாரிப்புக்கு ஏற்ற புதுப்பித்தல் தகவல் தொடர்புகளை உருவாக்குதல் மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி குறைந்த மனப்பான்மை கொண்ட புதுப்பித்தல்களைக் கண்டறிதல் ஆகியவை நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான உத்திகளாகும். பாலிசி முதிர்ச்சியை நெருங்கும் போது அதன் தனித்துவமான பலன்களை முன்னிலைப்படுத்துவது பாலிசிதாரருக்கான மதிப்பை மீண்டும் வலுப்படுத்துகிறது. நிகர ஊக்குவிப்பாளர் மதிப்பெண்-ஐ மதிப்புமிக்க அளவீடாகக் கொண்டு செயல்படும் வாடிக்கையாளர் மைய மேலாண்மை அமைப்பு அதிக நிலைத்தன்மைக்கு அவசியம். வாடிக்கையாளர் தக்கவைப்பு இலக்குகளுடன் விற்பனைக் குழு களை ஒழுங்கமைவு செய்வது, ஆன்போர்டிங் செயல்பாட்டின் போது சரியான தயாரிப்பில் கவனம் செலுத்துவதை உறுதி செய்கிறது.

பெரும்பாலும் வாடிக்கையாளர்களுக்குத் தெரியாத மதிப்பு கூட்டப்பட்ட நன்மைகள் நிலைத்தன்மைக்கு பங்களிக்க முடியும். உதாரணமாக, இந்தியா ஃபர்ஸ்ட் லைஃப் இன்சூரன்ஸ் முன்னோடியாக இருந்து செயல்படுத்தும் நெகிழ்வான காலக் கடன்கள் மற்றும் முன்கூட்டியே காப்பீட்டுத் தவணை செலுத்தும் வசதி ஆகியவை நிதிச்சுமையில் இருக்கும் பாலிசிதாரர்களுக்கு தேர்வு செய்யக்கூடிய வாய்ப்புகளை வழங்குகிறது. முன்கூட்டியே காப்பீட்டுத் தவணை செலுத்தும் வசதி நிலையற்ற வருமானம் கொண்ட பாலிசிதாரர்கள் முன்கூட்டியே தவணை செலுத்த அனுமதிக்கிறது, மேலும் சாத்தியமான வட்டி வருவாயை ஈடு செய்ய காப்பீட்டாளர்கள் தள்ளுபடி வழங்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

தொகுத்துச் சொல்வதென்றால், நிலைத்தன்மை என்பது வாடிக்கையாளருக்கும் காப்பீட்டாளருக்கும் இடையே ஒரு பகிரப்பட்ட பயணமாகும். வாடிக்கையாளருக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், #வாடிக்கையாளரே முதல் அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலமும், காப்பீட்டாளர்கள் தங்கள் நிலைத்தன்மை விகிதத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், இரு தரப்பினருக்கும் பலனளிக்க கூடியதொரு சூழ்நிலையை உருவாக்க முடியும். இது வெளிப்படையான தொடர்பு, தனிப்பயனாக்கப்பட்ட உத்திகள் மற்றும் வாடிக்கையாளர் சேவை இலக்குகளுடன் விற்பனைக் குழுக்களை சீரமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. தொழில்துறை தொடர்ந்து வளர்ச்சியடையும் சூழலில், வாடிக்கையாளரை மையமாகக் கொண்டிருப்பது, போட்டி நிறைந்த ஆயுள் காப்பீட்டு உலகில் நீண்ட கால வெற்றிக்கு முக்கியமாகும்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# 'டிராப்' நிலையிலிருந்து பங்களாதேஷைச் சேர்ந்த தாய் மற்றும் சேயை காப்பாற்றிய எம்ஜிஎம் ஹெல்த்கேரின் 'வரம்'

சென்னை, 27 டிசம்பர் 2023: இரட்டை தலைகீழ் தமனி ஊடுருவல் (டிராப்) என்ற மிக அரிதான பாதிப்புடன் அதிக இடர்வாய்ப்பிலிருந்த கர்ப்பவதிக்கு வெற்றிகர சிகிச்சை வழங்கப்பட்டிருப்பதை எம்ஜிஎம் ஹெல்த்கேரின் பெண்களுக்கான பிரத்யேக சூப்பர் ஸ்பெஷாலிட்டி மையமான வரம், அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. பங்களாதேஷை சேர்ந்த ஸிலீ இந்த பெண்மணியின் இரத்த புரதம் வளர்கருவின் இரத்த புரதத்திற்கு இணக்கமில்லாத நிலை இருந்ததால் இதற்கு முன்பு மூன்று பச்சிளம் குழந்தைகள் உயிர் பிழைக்கவில்லை. இத்தகைய நிலையில், உயிருள்ள ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க எம்ஜிஎம் ஹெல்த்கேரின் சிகிச்சை ஏதுவாக்கியிருக்கிறது. 2023 செப்டம்பர் மாதத்தில், பல்வேறு சிக்கல்கள் இருந்த தனது கர்ப்பநிலையின் காரணமாக பங்களாதேஷை சேர்ந்த திருமதி. ஜீனத் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற பெண்மணி எம்ஜிஎம் ஹெல்த்கேரில் இயங்கும் வரம் சிகிச்சை மையத்தின் உதவியை தேடிவந்தார். இரட்டை குழந்தைகளுடன் 20 வார கர்ப்பநிலையிலிருந்த அப்பெண்ணிற்கு திரும்ப திரும்ப நிகழும் கர்ப்பம் கலையும் பிரச்சனை இருந்திருக்கிறது. மகப்பேறு நாளிலிருந்து 1 அல்லது 2 நாட்களுக்குள் 2 பச்சிளம் குழந்தைகள் உயிரிழந்த சோகமும் இவருக்கு நிகழ்ந்திருக்கிறது. 2016 - ம் ஆண்டில் கர்ப்பம் தரித்த 19 வாரங்களில் கரு கலைந்து விட்டது. 2017 - ம் ஆண்டில் 32 வாரங்களில் 1.7 கிலோ என்ற குறைவான உடல் எடையுடன் குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தை இறந்து விட்டது. 2019 - ம் ஆண்டில் 36 வாரங்களில் 2.5 கி.கி பிறப்பு எடையுடன் பிறந்த மற்றொரு குழந்தை 2 நாட்கள் மட்டுமே உயிர் வாழ்ந்தது. இந்த இழப்புகள் இருந்த துயரமான வரலாற்றையும் மீறி இந்த ஆண்டு திருமதி. ஜீனத் 2 வளர்கருக்களுடன் மீண்டும் கர்ப்பம் தரித்தார். கடந்தகால குழந்தைகள் இழப்பின் காரணமாக முறையான வழிகாட்டல் மற்றும் சிகிச்சை பெறுவதற்காக அவர் இந்தியாவிற்கு வந்தார். கருவுற்ற 20 - வது வாரத்தின் போது எம்ஜிஎம் ஹெல்த்கேரின் வரம் மையத்திற்கு அவர் வருகை தந்து அதன் மகப்பேறியல், பெண் நோயியல் மற்றும் கருத்தரிப்பு சிறப்பு நிபுணர் டாக்டர். ஆர் வனிதா □□ரீ - ஐ சந்தித்தார். செய்யப்பட்ட ஸ்கேன் சோதனையின்போது வளர்கருக்களுள் ஒன்று இயல்புக்கு மாறாக இருப்பது கண்டறியப்பட்டது. அதைத்தொடர்ந்து செய்யப்பட்ட பல சோதனைகளின் மூலம் 'டிராப்' என அழைக்கப்படும் இரட்டை தலைகீழ் தமனி ஊடுருவல் பாதிப்பு இருப்பது அவருக்கு உறுதி செய்யப்பட்டது.

இரட்டை தலைகீழ் தமனி ஊடுருவல் ('டிராப்')

இரட்டை தலைகீழ் தமனி ஊடுருவல் வரிசை முறை அல்லது இதயம் இல்லாத இரட்டை குழந்தைகள் கருவில் வளர்வது என்பது மிக அரிதான ஒரு பிரச்சனை. 35,000 கருத்தரிப்புகளில் ஏறக்குறைய ஒரு நிகழ்வில் இப்பிரச்சனை இருப்பதாக அறியப்பட்டுள்ளது. 2 வளர்கருக்களுள் ஒன்று உடலமைப்பு ரீதியாக இயல்பு நிலையிலிருக்கும்போது மற்றொன்று இயல்புக்கு மாறான திசு திரளாக இருக்கும். பொதுவாக இதில் கால்களும், இடுப்பிற்கு கீழே உடலமைப்பும் இருக்கும்; ஆனால் இடுப்பிற்கு மேலே மேல் உடல், தலை அல்லது இதயம் இருக்காது. இதயமில்லாத காரணத்தினால், இந்த நிலையை விவரணை செய்ய 'ஏகார்டியாக் ட்வின்' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இயல்புக்கு மாறான திசு திரளுக்கு இரத்தத்தை பம்ப் செய்ய இயல்பு நிலை வளர்கருவின் இதயம் பயன்படுத்தப்படுவதால் இயல்பு நிலையிலுள்ள வளர்கரு 'பம்ப் ட்வின்' என குறிப்பிடப்படுகிறது. திசு திரள் என்ற வளர்கரு உயிர் பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை. இயல்பான கர்ப்ப நிலைகளில் வளர்கருவிலிருந்து வெளியே இரத்தத்தை தாயின் சூழற்சியிலிருந்து ஆக்ஸிஜனை பெறுவதற்காக கருவக சினைக்கொடியை நோக்கி வழக்கமாக தமனிகள் எடுத்துச்செல்கின்றன. துடிக்கும் இதயம் இல்லாத காரணத்தால், இதயமில்லாத திசு திரள் வளர்கரு, கருவக சினைக்கொடியின் எந்த ஒரு பகுதிக்கும் இரத்தத்தை அனுப்புவதில்லை. அதன் அனைத்து இரத்த சப்ளையின் 'பம்ப் ட்வின்' என அழைக்கப்படும் இயல்பான வளர்கருவின் சூழற்சியிலிருந்தே வருகிறது மற்றும் திரும்ப போகிறது. இரு வளர்கருக்களாலும் பகிர்ந்து கொள்ளப்படும் கருவக சினைக்கொடியின் மேற்புறத்தின் மீது சில தனித்துவமான இரத்தநாள பிணைப்புகளின் வழியாக இது நடைபெறுகிறது. இதயமில்லாத இரட்டை வளர்கருக்கள் இருக்கும்போது இந்த தனித்துவமான இரத்தநாள இணைப்புகள், தலைகீழ் திசையை நோக்கி தமனியில் உள்ள இரத்தம் பாயுமாறு செய்கிறது (இதயமல்லாத திசு திரளிலிருந்து விலகிச் செல்வதற்கு பதிலாக அதை நோக்கி இரத்தம் பாய்வது). இதன் காரணமாக இந்த அரிதான நிலையை விவரணை செய்ய 'இரட்டை தலைகீழ் தமனி ஊடுருவல்' (டிராப்) வரிசைமுறை என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இயல்பான 'பம்ப் ட்வின்', தனது சொந்த வளர்ச்சியடையும் திசுக்களுக்கு மட்டுமன்றி



இதயமல்லாத திசு திரள் வளர்கருவிற்கும் இரத்தத்தை அனுப்புகிற மற்றும் பெறுகிற கூடுதல் பணியை செய்யும் சுமையை எதிர்கொள்கிறது. இதன் காரணமாக இயல்பு நிலையிலுள்ள வளர்கருவின் இதயம் இருமடங்கு கடினமாக செயலாற்றுவதால் அதிக அழுத்தத்திற்கு ஆளாகிறது. இயல்பான வளர்கரு இதனால் இதய செயலிழப்பு ஏற்படும் தீவிர ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதற்கு சிகிச்சையளிக்காமல் விடப்படும்போது, வழக்கமாக இயல்பு நிலையிலுள்ள இரட்டை குழந்தைகளுள் 50% வரை பிரசவத்திற்கு முன்பே கருவகத்திலேயே இறந்து விடலாம் அல்லது பிறப்பிற்கு பிறகு விரைவிலேயே இறந்து விடலாம்.

எம்ஜிஎம் ஹெல்த்கேரின் வரம் மையத்தில் சிகிச்சை இரட்டை குழந்தையை காப்பாற்ற ஒரு சிகிச்சை திட்டத்தை டாக்டர். ஆர் வனிதா □□ரீ உருவாக்கினார். இதயமற்ற திசு திரளுக்கு இரத்தம் பாய்வதை தடுக்க ஒரு ரேடியோ-அதிர்வெண் நீக்கம் (ஆர் எஃப் ஏ டாக்டர். எஸ். சுதர்சனுடன் இணைந்து மெடிஸ்கானில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதயமற்ற திசை திரளின் அடிவயிற்றுப் பகுதியில் இந்த ஆர் எஃப் ஏ சாதனம், தாயின் அடிவயிறு மற்றும் கர்ப்பப்பை வழியாக உட்செலுத்தப்பட்டது; அக்கருவியின் முனையின் வழியாக ஆற்றல் வெளிப்படுத்தப்பட்டது. இதயமற்ற திசு திரளுக்கு இரத்தத்தை வழங்கும் இரத்த நாளங்களை இது துண்டித்து விடும். மெடிஸ்கேன் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் ஃபெட்டல் மெடிசின் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர். எஸ். சுதர்சன் இந்த செயல்முறையை விரிவாக விளக்கினார், “ரேடியோ-அதிர்வெண் (ஆர்எஃப்ஏ) நுட்பத்தில், நாங்கள் ஒரு சிறிய 14 ஜி ஊசியைப் பயன்படுத்துகிறோம் மற்றும் அல்ட்ராசவுண்ட் வழிகாட்டுதலைப் பயன்படுத்தி ஊசியை அறிமுகப்படுத்துகிறோம். இதய நிறை. இந்த முறையின் மூலம், அகார்டியாக் வெகுஜனத்திற்கு இரத்த ஓட்டம் நிறுத்தப்பட்டது, இதனால் சாதாரண பம்ப் இரட்டை பாதுகாக்கப்படுகிறது மற்றும் இதய செயலிழப்பு அல்லது இறப்புக்கான ஆபத்து கணிசமாகக் குறைவாக உள்ளது. கூடுதலாக, ரேசஸ் ஐசோஇம்யூனிசேஷன் காரணமாக சாதாரண இரட்டையரில் கடுமையான இரத்த சோகையால் கர்ப்பம் சிக்கலாக இருந்தது, இது ரேடியோ அலைவரிசை நீக்கம் செயல்முறைக்குப் பிறகு குழந்தைக்கு மூன்று கருப்பையக இரத்தமாற்றம் தேவைப்பட்டது. ஒரே நேரத்தில் ஒரே கர்ப்பத்தில் இரண்டு பெரிய, மாறுபட்ட சிக்கல்கள் கையாளப்பட்டதன் காரணமாக இது தனித்துவமானது.

எம்ஜிஎம் ஹெல்த்கேரின் வரம் மையத்தின் மகப்பேறியல், பெண் நோயியல் மற்றும் கருத்தரிப்பு சிறப்பு நிபுணர் டாக்டர். ஆர் வனிதா □□ரீ இதுபற்றி மேலும் விளக்கமளிக்கையில், “ரேடியோ-அதிர்வெண் நீக்க உத்தியில் 17-கேஜ் என்ற சிறிய ஊசியை நாங்கள் பயன்படுத்துகிறோம்; இது ஏறக்குறைய 1 மி.மீ ஆரம் கொண்டது (பிற மருத்துவ செயல்முறைகளில் 3 மி.மீ ஆரம் கொண்ட கருவிகள் தேவைப்படும்). உரிய காலத்திற்கு முன்பே பிரசவ வலி ஏற்படுவது மற்றும் கருவுற்ற நோயாளிக்கு குறைவான பாதிப்பு போன்ற மிக குறைவான சிக்கல்கள் ஏற்படாத நிலைக்கு இந்த மிகச்சிறிய கருவியை பயன்படுத்துவது வழிவகுக்கும். இந்த வழிமுறையின் மூலம் இதயமில்லாத திசு திரளுக்கு இரத்தம் செல்வது தடுத்து நிறுத்தப்பட்டது; இயல்பான பம்ப் ட்வின் - ன் இதயம் பாதுகாக்கப்பட்டது. இதய செயலிழப்பு அல்லது உயிரிழப்பு ஏற்படும் ஆபத்து இதன் காரணமாக இனி ஏற்படாது” என்று கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், “தன் எதிர்ப்பு இரத்தசோகை, பாஸ்போலிப்பிட் எதிர்ப்பு மற்றும் ஆன்டிபாடி பாசிட்டிவ் உட்பட வேறுபல சிக்கல்களும் இந்நோயாளிக்கு இருந்தன. அத்துடன் ஆர் எச்-நெகட்டிவ் என்ற சிக்கலும் இப்பெண்ணிற்கு இருந்தது. பாஸ்போலிப்பிட் எதிர்ப்பு மற்றும் ஆன்டிபாடி பாசிட்டிவ் நோய்க்குறி, தமனிகளிலும், நாளங்களிலும் உறைவு கட்டிகளை விளைவிக்கும்; வளரும் குழந்தைக்கு இரத்தம் செல்வதில் தடையை உருவாக்க கூடும். ஆகவே இந்நிலையிருந்த இந்நோயாளிக்கு பிரசவமாகும் வரை இரத்த அடர்த்தியை குறைக்கும் மருந்துகள் வழங்கப்பட்டன. இந்த சிக்கல்கள் அனைத்தும் எமது சவால்களை மிக தீவிரமானதாக ஆக்கியிருந்தன; எனவே ஒரு எம் சி ஏ டாப்லர் ஸ்கேன் சோதனை மூலம் கருவின் வளரும் குழந்தை ஒவ்வொரு வாரமும் கண்காணிக்கப்பட்டது. வளர்கருவில் ஹீமோகுளோபின் குறைவான இருந்ததால் கருவகத்திலேயே குழந்தைக்கு இரத்தம் ஏற்றலை மூன்று முறைகள் நாங்கள் மேற்கொண்டோம்” என்று குறிப்பிட்டார்.

கீழ்ப்புற அடி வயிற்றில் ஒரு பெரிய சீழ் கட்டியும் இப்பெண் நோயாளிக்கு உருவாகி அது சீழ் பிடித்து அழுகும் நிலைக்கு சென்றதால் அவரது கல்லீரல் செயல்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இதற்காகவும் இப்பெண்ணிற்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இத்தகைய அனைத்து சிக்கல்களும் கருத்தில் கொண்டு சிசேரியன் முறையின் மூலம் 32 வாரங்களில் குழந்தை பிறந்தது. பிறப்பிற்கு பிறகு தொடர்ச்சியான கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்ட இக்குழந்தைக்கு மாற்றுகை இரத்தமேற்றல் வழியாகவும் மஞ்சள்காமாலைக்கு சிகிச்சையளிக்கப்பட்டது (குழந்தையின் ஒட்டுமொத்த இரத்தமும் முழுமையாக மாற்றி செலுத்தப்பட்டது. இதனை, எம்ஜிஎம் ஹெல்த்கேரின் குழந்தைகள் நல மற்றும் பச்சிளம் குழந்தைகள் நலத்துறையின் முதுநிலை நிபுணர் பேராசியர் டாக்டர். பினு நினன் மற்றும் அவரது குழுவினர் வழங்கினர். பிரசவத்திற்கு பிறகு 2 வாரங்களுக்கும் அதிகமான கால அளவில் குழந்தையின் உடல்நிலை மேம்பட செய்வதிலும் மற்றும் மாற்றுகை இரத்தமேற்றலை திறம்பட மேற்கொள்வதிலும் இக்குழுவினரின் பங்கு மிக முக்கியமானது. இதன் தொடர்ச்சியாக தாயும் மற்றும் பிறந்த பெண் குழந்தையும் உடல்நலம் தேறியவுடன் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எம்ஜிஎம் ஹெல்த்கேரின் இயக்குநர் டாக்டர். அர்ஜிதா இராஜகோபாலன் கூறியதாவது: “டாக்டர். வனிதா □□ரீ - ன் நிபுணத்துவ வழிகாட்டலுடன் திருமதி. ஜீனத் - ன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) உத்வேகம் அளிக்கும் பயணம், எமது மருத்துவ குழுவினரின் மன உறுதியையும், புத்தாக்க முனைப்பையும் அழகாக எடுத்துக்காட்டுகிறது. டிராப் தொடர்வரிசை என்ற அரிதான நிலையின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்ட எமது குழுவினர், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் கனிவான பராமரிப்பின் வழியாக ஆரோக்கியமான குழந்தை பாதுகாப்பாக பிரசவிப்பதை உறுதி செய்திருக்கிறது. பெண்களுக்கு நேர்த்தியான உடல்நல சிகிச்சையை வழங்குவதில் வரம் கொண்டிருக்கும் தளராத பொறுப்புறுதிக்கு இச்சாதனை ஒரு நல்ல சாட்சியமாகும். நோயாளிக்கும் மற்றும் எமது அர்ப்பணிப்பு மிக்க மருத்துவ நிபுணர்களுக்கும் நம்பிக்கை மற்றும் வெற்றியின் ஒருமித்த சங்கம நிகழ்வாக இத்தருணம் இருந்தது. டாக்டர். ஆர் வனிதா □□ரீ - க்கும் குழந்தைகள் நல மற்றும் பச்சிளம் குழந்தைகள் நலத்துறையின் முதுநிலை நிபுணர் பேராசிரியர் டாக்டர். பினு நினன் மற்றும் அவரது குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை இம்மகிழ்ச்சியான தருணத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றியை சாத்தியமாக்குவதில் அவர்களது தளர்வில்லாத முயற்சிகள் பாராட்டுக்குரியவை. கனிவு மற்றும் புத்தாக்கத்துடன் சிகிச்சையையும், உடல்நல பராமரிப்பையும் மேம்படுத்துவதில் எமது அர்ப்பணிப்பை இந்த வெற்றிகரமான சிகிச்சை விளைவு அடிக்கோடிட்டு காட்டுகிறது. பெண்களின் ஆரோக்கியத்தில் நம்பிக்கை தரும் ஒளி விளக்காக எம்ஜிஎம் ஹெல்த்கேர் செயலாற்றி வருவதை இந்நிகழ்வு மீண்டும் உறுதி செய்துள்ளது”.

# ஆரோக்கியமான தேர்வுகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் விரிவோக்குவதற்கும் அக்ஷயகல்போ ஆர்கானிக், ஆர்கானிக் மளிகை பொருட்களின் ஒரு வரம்பு அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 27 டிசம்பர் 2023: இந்தியாவின் முதல் சான்றளிக்கப்பட்ட ஆர்கானிக் பால் நிறுவனமான அக்ஷயகல்பா ஆர்கானிக், ஊட்டச்சத்து, தூய்மையான அறிவியல் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகள் மூலம் ஒரு ஆரோக்கியமான உலகத்தை வளர்ப்பதற்கான அதன் பார்வைக்கு ஏற்ப ஒரு முன்முயற்சியான அதன் ஆர்கானிக் மளிகை பொருட்கள் வரம்பை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இந்த வரம்பில் பருப்பு வகைகள், உலர் பழங்கள், மாவு, சிறு தானியங்கள் , அரிசி, மசாலாப் பொருட்கள் மற்றும் இனிப்பூட்டுபவைகள் போன்ற தயாரிப்புகளின் ஒரு பலதரப்பட்ட தேர்வு அடங்கும்.

ஆர்கானிக் பண்ணைகளிலிருந்து நேரடியாகப் பெறப்பட்ட இந்த புதிய ஆர்கானிக் மளிகைப் பொருட்கள், வழக்கமான மளிகைப் பொருட்களுக்கு ஆரோக்கியமான மாற்றுகளை வழங்குவதற்கான அக்ஷயகல்பாவின் உறுதிப்பாட்டை அடையாளப்படுத்துகிறது . தற்போதைய பல்வகைப்படுத்தல் மூலம், இந்த நிறுவனம் அதன் தயாரிப்பு வரம்பை பால் உற்பத்திக்கு அப்பால் விரிவுபடுத்தியுள்ளது, இப்போது மளிகை பொருட்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளடக்குகிறது.

ஒரு அறிக்கையின் படி, இந்திய ஆர்கானிக் உணவு சந்தை 2022ல் $1,278 மில்லியனின் ஒரு மதிப்பை எட்டியது மற்றும் 2028-ல், 2023 முதல் 2028 காலகட்டத்தில் 23.8% இன் ஒரு கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை (சி ஏ ஜி ஆர்) பிரதிபலிக்கின்ற வகையில் $4,602 மில்லியனின் ஒரு மதிப்பை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆர்கானிக் மளிகை பொருட்கள் தேவையின் இந்த எழுச்சி நுகர்வோர் விழிப்புணர்வு, சுகாதார நன்மைகள் மற்றும் அதிகரித்த அணுகல் ஆகியவற்றால் தூண்டப்படுகிறது. அக்ஷயகல்பாவின் சமீபத்திய வகை, ஆர்கானிக் மளிகைப்பொருட்களின் ஒரு விரிவான தேர்வை வழங்குகிறது, ஆரோக்கியமான மற்றும் நிலையான உணவுத் தேர்வுகளுக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்கின்ற வகையில் அவற்றை நேரடியாக நுகர்வோரின் வீட்டு வாசலில் டெலிவரி செய்கிறது.




அக்ஷயகல்பா ஆர்கோனிக் நிறுவனதின் மேலாண்மை நிர்வாக அதிகோரி மற்றும் இணை நிறுவனர் திரு. ஷஷி குமோர் கூறுகையில், "ஆர்கானிக் முறைகளை கடைபிடிக்கும் அர்ப்பணிப்பு உள்ள பால் பண்ணையாளர்களுடன் இணைந்து அக்ஷயகல்பா பால் பொருட்கள் தவிர அவர்களின் பிரீமியம் விளைபொருட்களை விவேகமான நுகர்வோருக்கு கொண்டு வருவதற்கான மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியை முன்னெடுத்து வருகிறது. தற்போது, 1280 சான்றளிக்கப்பட்ட கரிம பால் பண்ணைகள், முக்கியமாக கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில், உள்ளதுடன் நாங்கள் இந்த வலையமைப்பை விரிவுபடுத்த உறுதிபூண்டுள்ளோம். அக்ஷயகல்பா பிராண்ட் மூலம், விவசாயிகளின் ஆர்கானிக் மளிகைப் பொருட்களை பெற்று அவர்களுக்கான சந்தை அமைப்பை நாங்கள் வசதியாக்குகிறோம்.

தற்போது 15 வித்தியாசமான மளிகைப் பொருட்களை உள்ளடக்கிய இந்த வழங்கல்கள், எங்கள் வரம்பை படிப்படியாக பன்முகப்படுத்துவதால், மேலும் வளர்ச்சியடைய அமைக்கப்பட்டுள்ளன. பிக் பாஸ்கெட், பிளாங்கட், ஸ்விக்கி போன்ற முன்னணி இ-காமர்ஸ் தளங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுடன் கூட அக்ஷயகல்பா செயலி மூலமும் எங்களது ஆர்கானிக் மளிகைப் பொருட்களை அணுக முடியும்." என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், “இந்த முயற்சி வேகத்தைப் பெறுவதால், கரிம மளிகைப் பிரிவானது எங்கள் வருவாயில் கணிசமாக பங்களிக்கும் என்று எதிர்பார்க்கிறோம், தற்போது 5% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிற இது நுகர்வோரின் தேவையைப் பொறுத்து ஒரு காலத்திற்குப் பிறகு வளரும். அக்ஷயகல்பாவின் நோக்கமானது, நிலையான விவசாயத்தை ஊக்குவிப்பதிலும் மற்றும் விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்கு ஒரு வலுவான சுற்றுச்சூழல் அமைப்பை வளர்ப்பதிலும் வணிகத்திற்கு அப்பாற்பட்டு நீடிக்கிறது" என் றார்.

2010 இல் நிறுவப்பட்ட அக்ஷயகல்பா ஆர்கானிக், ஆண்டிபயாடிக் இல்லாத, செயற்கை சேர்க்கை இல்லாத, மற்றும் பூச்சிக்கொல்லி எச்சம் இல்லாத பால் மற்றும் பால் பொருட்களை வழங்குவதில் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது. தூய்மையான வாழ்க்கை மற்றும் ஒரு நிலையான விவசாய சூழலுக்கான அர்ப்பணிப்புடன், அக்ஷயகல்பா இப்போது நுகர்வோரின் வளர்ந்து வரும் விருப்பங்களை பூர்த்தி செய்ய அதன் வழங்கல்களை விரிவுபடுத்துகிறது. இந்த வெளியீட்டின் மூலம், அக்ஷயகல்பா ஆர்கானிக் எதிர்காலத்தில் நுகர்வோர் தங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் மிகவும் நிலையான கிரகத்திற்கு பங்களிக்கின் ற, உணவைப் பற்றிய தகவலறிந்த தேர்வுகளை செய்ய முடியும். அக்ஷயகல்பா இன் அனைத்து ஆர்கானிக் பொருட்களுடன் உங்கள் உணவு மற்றும் உணவு தொகுப்பை மேம்படுத்துங்கள். உங்கள் குடும்பத்திற்கு ஒவ்வொரு கடியிலும் நல்வாழ்வு மற்றும் தரத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் முழுமையான ஊட்டச்சத்து மற்றும் பாதுகாப்பான ஊட்டச்சத்தை உறுதிசெய்கிறது.